**கவனிக்க.-** *08.02.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1798 - 2013 පෙබරවාරි මස 15 වැනි සිකුරාදා - 2013.02.15**

*1798 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 152 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 158 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2013, மாச்சு மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**பீ. எச். எல். வீ. டி சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை நிரந்தர வான்படை

*பயிலிளவல் ஆண்/பெண் அலுவலர்களுக்கான வெற்றிடங்கள்*

*இலங்கை நிரந்தர வான்படையில் கீழ்வரும் பிரிவுகளில் பயிலிளவல் ஆண்/பெண் அலுவலர்களுக்கான பதவி வெற்றிடங்கள் உள்ளன :-*

(அ) பொதுக்கடமை விமான ஓட்டுனர் பிரிவு (ஆண்)
(ஆ) தொழினுட்ப பொறியியல் (ஆண்/பெண்)
(இ) உபகரணப் பிரிவு (ஆண்/பெண்)
(ஈ) நிருவாகப் பிரிவு (ஆண்/பெண்)
(உ) நிருவாக ரெஜிமன்ட் பிரிவு (ஆண்/பெண்)
(ஊ) வான் வழி நடத்துனர் பிரிவு (ஆண்/பெண்)

2. கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய ஆண்/பெண் இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

***BSc. (Aviation Studies) பட்டப் பயிற்சிக்கு உட்செல்வதற்கான தகைமை (ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவலை பல்கலைக்கழகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட)***

*பொதுக்கடமை விமான ஓட்டுனர்/வான் வழி நடத்துனர் பிரிவுகள் :*

குறைந்தபட்சம் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச்சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் சிங்களம்/தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக/உயிரியல் பிரிவில் (தேவையைப் பொறுத்து) மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

*தொழினுட்ப பொறியியல் பிரிவு :*

குறைந்த பட்சம் க. பொ. த. (சா.த) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச்சித்தி உட்பட (மேலதிக கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் சிங்களம்/தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ.த) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக விஞ்ஞானப் பிரிவில் மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

*உபகரண/நிருவாக/நிருவாக ரெஜிமன்ட் பிரிவுகள் :*

குறைந்த பட்சம் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச்சித்தி உட்பட (மேலதிக கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் சிங்களம்/தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக/ உயிரியல்/ வர்த்தகப் பிரிவில் (தேவையைப் பொறுத்து மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கலைப்பிரிவில் (தேவையைப் பொறுத்து) மூன்று பாடங்கள் சித்திபெற்றிருந்தால் நிருவாக ரெஜிமன்ட் பிரிவுக்கு விண்ணப்பிக்க முடியும்.

3. **வேறு தகைமைகள்.**- இவற்றுக்கு மேலதிகமாக விண்ணப்பதாரிகள் இலங்கை நிரந்தர வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொது நிபந்தனைகளை கட்டாயமாக பூர்த்திசெய்தல் வேண்டும் :-

(அ) தேசிய இனம் :- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ஆ) வயது :- 2013, யூலை 01 ஆந் திகதியன்றுள்ளவாறு 18 வயதிற்கு குறையாமலும் 22 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
(இ) உயரம் :- ஆண் - 5 அடி 6 அங்குலத்திற்கு குறையாதிருத்தல் வேண்டும் ; பெண் - 5 அடி 4 அங்குலத்திற்கு குறையாதிருத்தல் வேண்டும்.
(ஈ) உடல் நிறை :- ஆண் 17 < உடற்பருமன் சுட்டி (BMI) < 26 ; பெண் 17 < உடற்பருமன் சுட்டி (BMI) < 25

$$\text{உடற்பருமன் சுட்டி (BMI)} = \frac{\text{நிறை (கி. கி.)}}{\text{உயரம் (மீ)}^{2}}$$

(உ) மார்பு :- ஆண் 32" (குறைந்தது)
(ஊ) பார்வை வர்ணப்பதிவு மட்டம் :- CP2
(எ) தொலை பார்வை :- இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்)
(ஏ) குடியியல் நிலை :- தேர்வு நாடிகள் திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். பயிலிளவல் எவரும் பயிற்சியின்போதும் ஆணைபெற்ற திகதியிலிருந்து ஓராண்டு காலத்துக்கும் திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

4. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள சாதனைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

5. இரண்டாம் மூன்றாம் பந்தியின் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யாத தேர்வுநாடிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், நிறை, பார்வை மட்டம் என்பன பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உயரம், நிறை, பார்வை மட்டம் ஆகியவற்றிற்கு குறைவானவர்களும் உடற்தகைமை மட்டத்தை கொண்டிராதவர்களும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள். தேவையான உயரம் இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படைத் தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

6. **சேவை நிபந்தனைகள்.**- (அ) தேர்வுநாடி தொடக்கத்தில் ஏனைய பதவி வரிசைகளுக்குப் போன்ற அதே விதத்தில் வான்படையில் ஒரு பயிலிளவலாகச் சேர்க்கப்பட்டு அடிப்படை யுத்தப் பயிற்சியொன்றை மேற்கொள்வர். அடிப்படை பயிற்சி திருப்திகரமாக முடிவடைந்ததும் மற்றைய பயிற்சிக்கான காலப்பகுதி பயிலிளவல் சேவையின் கிளையைப் பொருத்து இருக்கும். பின் ஏனைய பதவி வரிசையிலான ஆட்சேர்ப்பு நீக்கப்பட்டு பைலட் ஒபிசர் பதவி வரிசையில் நிரந்தர ஆணையொன்றை பெறுவர்.

(ஆ) பயிலிளவல் பாதுகாப்பு அமைச்சின் கலந்தாலோசனையுடன் வான் படை ஏவுநரினால் தீர்மானிக்கப்பட்டவாறான இலங்கையினுள் அல்லது வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்குத் தேவைப்படுத்தப் படுவர்.

(இ) பயிலிளவல்களாகப் பயிற்சி பெறும் காலப்பகுதியின்போதும் அதன் பின்னரும் ஆளணியினர் வான்படைச் சட்டத்திற்கு ஆளாவர்.

(ஈ) ஒவ்வொரு பயிலிளவலுக்கும் அனைத்து வகை சீருடைகள், உபகரணங்கள், மருத்துவ வசதிகள் என்பனவும் அளிக்கப்படும்.

(உ) பயிலிளவலின் பயிற்சிக் காலத்தின்போது பயிலிளவலுக்கு வான்படை உணவு விடுதியொன்றில் இடவசதியளிக்கப்பட்டு உணவும் வழங்கப்படும்.

(ஊ) ஒரு பயிலிளவல் பயிற்சியின்போது ஆணையொன்றைப் பெறுவதற்கான தேர்வை நாடும் நிலையில் இருந்து தாமாகவே விலகிக்கொள்ளுமிடத்து அத்தகைய பயிலிளவலின் பொருட்டு அதுகாலவரையில் இலங்கைக் குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செலவுகள் யாவும் இலங்கைக் குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவர்.

(எ) ஒரு பயிலிளவல் தமது பயிற்சியின்போது எச்சமயத்திலும் பிறழ்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஏதுக்களுக்காக ஆணை பெறுவதற்கான தகைமைக்குப் பொருத்தமற்றவ ரென அதிகாரிகளினால் அறிக்கை இடப்படுமிடத்து அவர் பயிற்சியில் இலங்கைக் குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லாச் செலவுகளையும் இலங்கைக் குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவரென்பதுடன் இதற்காக இலங்கை அரசின் சார்பில் வான்படை ஏவுநருடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்யும்படியும் தேவைப்படுத்தப்படுவர்.

(ஏ) பெற்றோர் அல்லது பாதுகாவலர் உப்பந்திகள் ஊ, எ தொடர்பாக விண்ணப்பப்படிவத்தின் 27 ஆம் சுட்டில் தரப்பட்டுள்ளதைப் போன்ற வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிட்டு அவற்றை விண்ணப் பத்துடன் சேர்த்து அனுப்பிவைத்தல் வேண்டும். இத்தேர்வுநாடிகள் பயிலிளவல்களாக நியமிக்கப்படுவதற்கு முன்பு பெற்றோர் அல்லது பாதுகாவலர் இந்தப் படிவத்தில் பின்தொடரும் ஒரு ஒப்பந்தத்தை இலங்கைக் குடியரசுடன் செய்து கொள்ளும்படி தேவைப்படுத்தப்படுவர்.

(ஐ) பந்தி 02 இலும் 03 இலும் உள்ள தேவைகளைக் கொண்டிருக்கும் தேர்வுநாடிகள் முதலாவது நேர்முகப்பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டுவதுடன் இதில் சித்தி பெறுபவர்கள் அலுவலர் தரப் பரீட்சைக்கும் அழைக்கப்படுவர். அலுவலர் தரப்பரீட்சையில் சித்தி பெறும் தேர்வுநாடிகள் மருத்துவப் பரிசோதனைக்கும் உட்படுத்தப் படுவதுடன். (எல்லா விண்ணப்பதாரிகளும் இலங்கை வான்படையினால் ஒழுங்கு செய்யப்பட்ட மருத்துவச் சபைக்கு உட்படுத்தப்படுவர்.) தேவைப்படின் விமானத்தில் செல்லும் திறமையும் பரீட்சிக்கப்படும். ஒவ்வொரு கிளைகளுக்கும் தேவைப்படும் தேர்வுநாடிகளின் எண்ணிக்கை அவரவர்கள் இந்த நேர்முகப் பரீட்சைகளிலும் தேர்வுகளிலும் காண்பித்த திறமைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

(ஒ) திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

(ஓ) திருமணமாகிய அலுவலராயின் (கிடைக்குமாயின்) மணமானோர் குடிமனை வழங்கப்படும். பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தாவது போன்று வாடகை அறவிடப்படும்.

(ஔ) எல்லா அலுவலருக்கும் உலகின் எப்பாகத்திற்கும் எந்நேரத்திலும் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

(அஅ) எல்லா அலுவலருக்கும் வான் படைச் சட்டத்தினாலும் காலத்திற்கு காலம் வழங்கப்படும் கட்டளையினாலும் ஆளப்படுவர்.

7. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்** :- தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வு நாடிகள் இலங்கைக் குடியரசின் மொழிக் கொள்கைக்கு உடன்பட்டவர்களாகவும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவற்காகவும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற அல்லது இதன்பின்னர் ஆக்கப்பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

8. **சம்பளமும் கொடுப்பனவுகளும்.- *(அ) இலங்கை வான் படையில் பயிலுனர்களுக்கும் ஆணைபெற்ற அலுவலர்களுக்கு மான சம்பளம் பின்வருமாறு (ஆண்டொன்றுக்கு) -***

*பயிலிளவல் : ரூபா 1,87,620*
*பைலட் ஆபீசர் : ரூபா 2,42,700*
*பிளையிங் ஆபீசர் : ரூபா 2,75,220 – 34 x 7,740 - ரூபா 5,38,380*
*ப்ளையிட் லெப்டினன்ட் : ரூபா 3,21,660 – 28 x 7,740 - ரூபா 5,38,380*
*ஸ்குவாட்ரன் லீடர் : ரூபா 3,52,620 – 24 x 7,740 - ரூபா 5,38,380*
*விங் கமாண்டர் : ரூபா 3,62,100 – 20 x 9,480 - ரூபா 5,51,700*
*குறூப் கப்ரின் : ரூபா 4,41,060 – 18 x 12,600 - ரூபா 6,67,860*

(ஆ) ***ஏனைய கொடுப்பனவுகள்.-***

(1) வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு ரூபா 6,600.

(2) உற்சாகமூட்டும் கொடுப்பனவு ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250 வீதம் வழங்கப்படும்.

(3) கடினப்படி : மாதமொன்றுக்கு ரூபா 600.

(4) விசேட கொடுப்பனவு : யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர் களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 5,000 (மாதமொன்றுக்கு).

(5) விசேட கொடுப்பனவு ரூபா 3,000 (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 100 வீதம் கொடுப்பனவு வழங்கப்படும்.)

(6) இடைக்காலக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 1,000.

(7) சீருடை பேணுதல் படி (மாதமொன்றுக்கு ரூபா 255).

(8) சேவையாளர் படி : மாதமொன்றுக்கு ரூபா 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்)

(9) உணவுப்படி மாதமொன்றுக்கு ரூபா 13,861.50 (வெளியி லிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்)

(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை).

(11) விசேட கொடுப்பனவு 15% அடிப்படை சம்பளத்தில்

(12) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும் துணைவிக்கும் பிள்ளை களுக்கும்)

(13) உணவு விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலவின மீளளிப்பு.

(14) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும்.

(15) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடையதாயின் குடும்பத்தின ருக்கும்).

(16) திருமணமான அலுவலருக்கு மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து 30 மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப் பயணம் செய்வதற்கு இ. போ. ச. இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும்.

(17) பொதுக்கடமை விமான ஓட்டுனர் கிளையில் உள்ளவர் களுக்கு பறத்தல் சம்பளம் வழங்கப்படும்.

(18) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமண மான அலுவலர்களுக்குப் பைலற் ஆபீசர் இல் இருந்து குறுப் கப்ரன் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு ரூபா 1,600 இலிருந்து ரூபா 4,250 வரை வாடகைப்படிகள் கொடுபடற் பாலனவாகும்.

9. **ஓய்வூதியங்கள் / பணிக்கொடைகள்**.- காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 இன் வான்படை ஓய்வூதிய அத்துடன் பணிக்கொடைகள் கோவையின் நியதிகளின்படி கொடுபடற்பாலன வாகும். எல்லா அலுவலர்களும் விதவைகள், அநாதைகள் (ஆயுதந் தாங்கிய படைகள்) ஓய்வூதிய திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துப வராவர். உதவுதொகை 1970 ஆம் ஆண்டின் விதவை, அநாதைகள் (ஆயுதங் தாங்கிய படைகள்) ஓய்வூதியத் திட்டத்தில் உள்ளபடியனவாகும்.

10. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்**.- (அ) விண்ணப் பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப் பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங் களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2013, பெப்புருவரி 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "கட்டளை ஆட்சேர்ப்பு அதிகாரி, இலங்கை விமானப்படை, ஏக்கல, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத்தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "பயிலிளவல் ஆண்/பெண் அலுவலர்களுக்கான விண்ணப்பம் - ............................ பிரிவு" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் தேதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை வான்படையை வந்தடைவனவும் இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப் பங்கள் கவனிக்கப்படமாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில்/கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பக்காரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் / சபையின் / குடியியல் தாபனத்தின் தலைமை யதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பக்காரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) தேர்வுநாடி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்போது அல்லது அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும்போது பின்வருவனவற்றின் மூலப்பிரதிகளை காண்பிக்குமாறு தேவைப்படுத் தப்படுவர் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் (கல்விச் சட்டக்கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(2) விண்ணப்பித்த கிளைக்குத் தேவையான கல்வித் தகைமை களை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்.

(3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில்/ தொழில்நுட்பப்பயிற்சி அத்துடன் / அல்லது அனுபவச் சான்றிதழ் (எவையேனுமிருப்பின்).

(4) இரு குணநலச் சான்றிதழ்கள். இதில் ஒன்று விண்ணப்பதாரர் கடைசியாகக் கல்வி கற்ற பாடசாலை அதிபரினதாகவும் மற்றையது இரண்டு வருடங்களுக்கு மேலாக விண்ணப்பக் காரரை அறிந்துள்ளவரான பொறுப்புவாய்ந்த ஒருவரினதாக அல்லது தொழில் செய்பவராயின் அப்போதைய தொழில் தருநரினதாக இருத்தல் வேண்டும்.

(5) விளையாட்டுத்துறைகள், பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள்.

(ஈ) ஆவணங்களைக் காண்பிக்கும்படி வேண்டப்படும்போது அவற்றைக் காண்பிக்கத் தவறியவர்களான தேர்வுநாடிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கெடுக்கப்படமாட்டா.

(உ) ஆவணங்களோ ஆவணங்களின் பிரதிகளோ விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை காணாமற் போனமைக்கு வான்படை பொறுப்பல்ல.

11. விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்கு பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவிநீக்கத்திற்கும் விண்ணப்பகாரரை ஆளாக்கிவிடும்.

12. **தேர்ந்தெடுத்தல், நேர்முகப்பரீட்சை முதலியன**.- (அ) மேற்கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் தேர்வுநாடிகளிலிருந்து பூர்வாங்கத் தெரிவுகள் செய்யப்படும். ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்படும் தேர்வுநாடிகள் வான்படை ஏவுநரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய சோதனைகளுக்கு உட்படுத்தப்படும்படி தேவைப்படுத்தப்படுவார்கள். இதன் பின்னர் தெரிவுச் சபை ஒன்றினாலான நேர்முகப் பரீட்சையின் பின்னர் இறுதித் தெரிவு நடைபெறும்.

(ஆ) நேர்முகப் பரீட்சைகளுக்குத் தெரிவுசெய்யப்படும் தேர்வுநாடி களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைக்கான இடம், நேரம், திகதி என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இது சம்பந்தமாகப் பயண அல்லது பிற செலவுகள் வழங்கப்படமாட்டா.

(இ) விண்ணப்பக்காரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும்.

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சைகளைத் தொடர்ந்து பொருத்த மாகக்கூடியவரான தேர்வுநாடிகள் வான்படை மருத்துவச் சபைக்கு சமுகமளிக்கும்படி தேவைப்படுத்தப்படுவர்.

(உ) ஒரு தேர்வுநாடியைச் சிபாரிசு செய்ய விரும்புவதாயின் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பக்காரரை தகுதியிழக்கச் செய்யும்.

(ஊ) சேர்த்துக்கொள்வதற்குப் பொருத்தமற்றவராகக் காணப்படும் தேர்வுநாடிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்படமாட்டா.

எச். டி. அபேவிக்ரம,
எயர் மார்ஷல்,
வான் படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான் படை,
த. பெ. எண் 594,
கொழும்பு 2.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிரந்தர வான்படை**

............................ பிரிவில் ஆண்/பெண் பயிலிளவல் அலுவலர் பதவி

1. தேசிய இனம் :----.

(இலங்கைப் பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா, பதிவுமுறையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக)

2. முழுப்பெயர் (தேசிய ஆளடையாள அட்டைப்படி) :----.

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.

4. நிரந்தர முகவரி :----.

5. தற்போதைய அஞ்சல் முகவரி :----.

6. பிறந்த திகதி :----.

வயது (2013, யூலை 01 ஆந் திகதியன்று) :-

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

7. உயரம் : ---- அடி, ---- அங்குலம்.

8. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிசு நிலையம் : ----.

9. மாவட்டம் :----.

10. தேர்தற் தொகுதி :----.

11. கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.

12. தொலைபேசி இலக்கம் :----.

13. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? :----.

14. பால் :----.

15. பாடசாலை அத்துடன் / அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :----.

| பாடசாலை/ சர்வகலாசாலை பெயர்கள் | பரீட்சையின் தன்மை | ஆண்டு | சித்தியடைந்த பாடங்கள் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.)<br>க.பொ.த. (உ.த.)<br>வேறு | | |

16. பாடசாலை/ பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

17. பெற்றோர் பற்றிய விபரங்கள் :-

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

18. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----.

19. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் :----. (குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக).

20. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும்பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) :----.

21. இதற்கு முன் ஆயுதப் படையில், தொண்டர் படையில், பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை :----.

22. இலங்கை வான்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேரும் பொருட்டு முன்பு விண்ணப்பித்துள்ளீரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக :----.

23. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப் பட்டீரா ? அல்லது பிணையில் விடப்பட்டீரா ? அப்படியாயின் விபரங்கள் தருக :----.

24. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/ சபையில்/ கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி/ தேசிய வங்கி/ பல்கலைக்கழகங்கள்/ அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :----.

25. நற்சான்றிதழ்கள் வழங்கியோர் பற்றிய விபரங்கள் :-

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

26. **விண்ணப்பக்காரர் கைச்சாத்திடவேண்டிய வெளிப்படுத்துகை-**

மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத் துள்ள விடைகள் யாவும் என் அறிவுக்கும் விசுவாசத்துக்கும் சரியானவை என என் மீது ஆணையாக உறுதிமொழிகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படைக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள் ளப்பட்ட நடவடிக்கை முறைகளையும் அவர்கட்குப் பொருத்த மான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து விளங்கிக் கொண்டேன்.

----,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி :----.

27. **விண்ணப்பக்காரரின் பெற்றோரால் அல்லது பாதுகாவலரால் கையொப்பமிடவேண்டிய வெளிப்படுத்துகை :**

(அ) இலங்கை வான்படையில் பயிலுனராக விண்ணப்பித்து மேலே கொடுக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் 26 ஆம் சுட்டின் வெளிப்படுத்துகையில் கையொப்பமிடப்பட்டிருக்கும் ............................. என்பவருக்கு நான் பெற்றோர்/ பாதுகாவலர் ஆவேன்.

(ஆ) மேற்கூறப்பட்டிருக்கும் விண்ணப்பதாரர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுமிடத்து பின்வருவனவற்றுக்கு நான் பொறுப்பாளியாவேன் :-

(1) பயிற்சியின்போது ஆணைக்கான அவரது தேர்வு நாடும் நிலையிலிருந்து தாமாகவே விலகுமிடத்து இலங்கைக் குடியரசினால் அக்காலம் வரை உறப்பட்ட செலவுகள் யாவற்றையும் இலங்கைக் குடியரசிற்கு திருப்பிக் கொடுப்பதற்கும்,

(2) பயிற்சியின்போது எச்சமயத்திலும் நடத்தை காரணமாக அல்லது அவரது சொந்த கட்டுப்பாட்டுக்கு காரணங்களுக்காக ஆணை வழங்கப்படுவதற்குத் தகுதிபெற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை விடப்படுமிடத்து இலங்கைக் குடியரசினால் அக்காலம் வரை உறப்பட்ட செலவுகள் யாவும் இலங்கை குடியரசுக்கு திரும்பச் செலுத்துவதற்கும் உடன் படுகிறேன்.

----,
பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி :----.
திகதி :----.

----,
முதலாம் சாட்சியின் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி :----.
திகதி :----.

----,
இரண்டாம் சாட்சியின் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி :----.
திகதி :----.
(தேவையற்றதை வெட்டிவிடுக.)

2-483

---

## திருத்தம்

### பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - ஹம்பாந்தோட்டை மாவட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 16.11.2012 ஆந் திகதிய 1785 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானியில் என்னால் பிரசுரிக்கப்பட்ட பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விவாக, பிறப்பு, இறப்புப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் ஏற்கும் இறுதித் திகதி 28.02.2013 ஆந் திகதி வரை நீடிக்கப்படும் என திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதனை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

1. முன்னர் பிரசுரிக்கப்பட்ட அனைத்து விபரங்களும் சரியானது. இறுதித் திகதியில் மாத்திரம் நீடிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

பதிவாளர் நாயகம்.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| ஹம்பாந்தோட்டை | அம்பலாந்தோட்டை | போலன பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், ஹம்பாந்தோட்டை |

2-426

---

## நீதிச்சேவை ஆணைக்குழு

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களில் நிலவும் ''காதி'' வெற்றிடங்களுக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்காக முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) இன்கீழ் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே குறிக்கப்படும் தகைமைகளைக் கொண்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

முஸ்லிம் சமயத்தைச் சார்ந்த ஆண் விண்ணப்பதாரர் ஒருவர் பல்கலைக்கழகப்பட்டம் பெற்றுள்ள ஒருவராக அல்லது முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றுள்ள மௌலவி ஒருவராக அல்லது கல்வித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அல்-ஆலிம் சான்றிதழ் பெற்றுள்ள ஒருவராக அல்லது சட்டத்தரணி ஒருவராக அல்லது அதற்குச் சமமான தொழில்சார் தகைமையுடைய ஒருவராக அல்லது ஓய்வுபெற்ற பதவிநிலை தரத்திலான உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும். தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் இதற்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவர்களாவர்.

விண்ணப்பதாரர் இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி ஒழுகுபவராகவும், 40 வயதிற்கு மேற்பட்டவராகவும், நல்ல தேகாரோக்கியம் உள்ளவராகவும், நல்ல ஒழுக்கமுள்ளவராகவும் இருக்கவேண்டியதோடு, முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் மற்றும் விசேடமாக முஸ்லிம் சட்டம் பற்றிய நல்ல அறிவுடையவராகவும், சமூகத்தில் நல்ல வரவேற்பும் மதிப்புமுடையவராகவும், விவாகமான ஒருவருமாக இருத்தல் வேண்டும்.

தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படுகின்ற காலஎல்லைக்கு நியமனம் செய்யப்படுவார்.

காதியாக நியமிக்கப்படுபவர் அப்பிரதேசத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருப்பது சட்டரீதியான அவசியமாகும்.

காதி ஒருவருக்கு ரூபா 6,000 மாதாந்தக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக உதவியாளர் சேவை, எழுதுகருவிகள் மற்றும் அஞ்சல் செலவுக்காகவும் மாதாந்தம் ரூபா 5,000 கொடுப்பனவாக வழங்கப்படும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்தினை நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்தில் பெற்றுக்கொள்வதோடு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைத்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''காதிப்பதவிக்கான விண்ணப்பம்'' எனக் குறிப்பிட்டு 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 14 ஆந் திகதிக்கு முன் எனக்குக் கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

மன்ஜுல திலகரத்ன,
செயலாளர்,
நீதிச் சேவை ஆணைக்கு.

நீதிச் சேவை ஆணைக்குழு செயலகம்,
த. பெ. இல. 573,
புதுக்கடை,
கொழும்பு 12.

**அட்டவணை**

1. அநுராதபுரம் - அநுராதபுர மாவட்டத்தின் நுவகரகம், ஹுருல, தலகம் ஆகிய இறைவரிப் பிரிவுகளுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (115 ஆம் அத்தியாயம்) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

2. கொழும்பு தெற்கு - கொம்பனித்தெரு, கருவாத்தோட்டம், கொள்ளுப் பிட்டி, பம்பலப்பிட்டி, ஹெவ்லொக் டவுன், நாரஹேன்பிட்டி, வெள்ளவத்தை, கிருலப்பனை ஆகிய நீதிப் பிரிவுகளுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (115 ஆம் அத்தியாயம்) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

3. பேருவளை - களுத்துறை மாவட்டத்தின் பேருவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (115 ஆம் அத்தியாயம்) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

*4.* குருநாகல் - குருநாகலை மாவட்டத்தின் குருநாகலை நீதிப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (115 ஆம் அத்தியாயம்) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

5. மொனராகலை - மொனராகலை மாவட்டத்தின் மொனராகலை நீதிப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (115 ஆம் அத்தியாயம்) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

6. நீர்கொழும்பு - நீர்கொழும்பு நீதிப் பிரிவுக்கான காதிப் பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (115 ஆம் அத்தியாயம்) படி நீதிச் சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

7. ஓட்டமாவடி - மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று மேற்கு இறைவரிப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (115 ஆம் அத்தியாயம்) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

8. புல்மோட்டை - திருகோணமலை மாவட்டத்தின் கட்டுகுளப் பற்று கிழக்கு, மேற்கு இறைவரிப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (115 ஆம் அத்தியாயம்) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

9. இரத்தினபுரி - இரத்தினபுரி மாவட்டத்தின் இரத்தினபுரி நீதிப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (115 ஆம் அத்தியாயம்) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

10. இடம்பெயர்ந்தவர்கள் - இடம்பெயர்ந்தவர்களுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (115 ஆம் அத்தியாயம்) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

11. தும்பனை - கண்டி மாவட்டத்தின் தும்பனை பிரதேச செயலாளர் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (115 ஆம் அத்தியாயம்) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

12. கேகாலை - கேகாலை மாவட்டம், கேகாலை நீதிப்பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (115 ஆம் அத்தியாயம்) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

13. அம்பாந்தோட்டை - அம்பாந்தோட்டை மாவட்டம், அம்பாந்தோட்டை நீதிப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (115 ஆம் அத்தியாயம்) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

14. காத்தான்குடி - மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்று வடக்கு, தெற்கு, எருவில் மற்றும் போரைதீவு இறைவரிப் பிரிவுகளுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (115 ஆம் அத்தியாயம்) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

2-604

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை நிலஅளவைத் திணைக்களம்

### இலங்கை நில அளவைத் திணைக்களத்தில் பயிலுனர் நில அளவையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013

இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தில் பயிலுனர் நில அளவையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2013, மே மாதம் கொழும்பில் மாத்திரம் நடத்தப்படும். பரீட்சைத் திகதி உரிய காலத்தில் பத்திரிகையினூடாக அறிவிக்கப்படும்.

பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள ஆண், பெண் இரு சாராரிடமிருந்தும் இப்பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**2. தகைமைத்திறன்.-**

(i) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்வருவனவற்றை ஆதாரப் படுத்தும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) ஒரு இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்;

(இ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 22 வயதுக்குக் குறையாமலும், 33 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ii) *கல்வித்தகைமைகள்.-* சகல பரீட்சார்த்திகளும் பின்வரும் கல்வித்தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து அளவையியல் விஞ்ஞானத்தில் பட்டத்தையோ அல்லது கணிதம் அல்லது பௌதீக விஞ்ஞானத்தை ஒரு பாடமாகக் கொண்ட விஞ்ஞானமாணிப் பட்டத்தையோ அல்லது கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தையோ (க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணிதத்தை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்திருத்தல் வேண்டும்) அல்லது சிவில் எந்திரவியல் பட்டத்தையோ பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.-** பட்டத்திற்கான பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் எவரும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியாது. எனினும்

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டப்பரீட்சையில் சித்தியடைந்து பட்டச் சான்றிதழுக்காகக் காத்திருக்கும் ஒருவர், அவர் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகப் பதிவாளரிடமிருந்து பட்டப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார் எனக் குறிப்பிடும் உத்தியோகபூர்வக் கடிதமொன்றைப் பெற்று அதனை விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிப்பதனூடாக இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட முடியும்.

3. **சேவை நிபந்தனைகள் :**

(i) இப்பதவிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட திரட்டிய மாதச் சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :- (பொ. நி. சுற்றறிக்கை இல. 06/2006 (IV) MN 5 2006 A) ரூபா 16,720 - 10 × 320 - 11 × 365 - 15 × 450 - ரூபா 30,685 ;

(ii) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியமுடையதுமாகும் ;

(iii) பதவியை நிரந்தரமாக்குதல் :

(அ) பயிலுனர் நில அளவையாளர் பதவிக்கு நியமிக்கப் படும் நில அளவையியல் விஞ்ஞானப் பட்டதாரிகள் இலங்கை திணைக்கள அலுவல்களில் பயிற்சியைப் பூர்த்திசெய்தல் உள்ளடங்கலாக திணைக்களத்தில் மொத்தம் 4 வருடம் திருப்திகரமான சேவையைப் பூர்த்திசெய்த பின் சேவையில் நிரந்தர அந்தஸ்து வழங்கப்படும்.

(ஆ) பயிலுனர் நில அளவையாளர் பதவிக்கு நியமிக்கப் படும் கணிதம் அல்லது பௌதீக விஞ்ஞானத்தை ஒரு பாடமாகக் கொண்ட விஞ்ஞானமாணிப் பட்டத்தையோ அல்லது கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தையோ அல்லது சிவில் எந்திரவியல் பட்டத் தையோ உடையவர்கள் நில அளவை விஞ்ஞானத்தில் விஞ்ஞானப் பட்டத்தையும் பெற்று திணைக்கள அலுவல்களில் பயிற்சி உள்ளடங்கலாக திணைக் களத்தில் மொத்தம் 6 வருடங்கள் திருப்திகரமான சேவையைப் பூர்த்திசெய்த பின் இலங்கை நிலஅளவை யாளர் சேவை வகுப்பு II/II இல் நியமிக்கப்பட்டு நிரந்தர அந்தஸ்து வழங்கப்படும்.

(iv) தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு அவர்கள் உடல் ரீதியாக தகுதியுடைய வர்களா என்பதை உறுதிப்படுத்துமுகமாக அரசாங்க வைத்திய சாலையில் அரசாங்க வைத்திய அதிகாரி ஒருவரினால் வைத்தியப் பரிசோதனை ஒன்றுக்கு உட்படுத்தப்படுவர்.

(v) இவ்வர்த்தமானியின் பகுதி I தொகுதி (II அ) இல் பிரசுரிக்கப் பட்டுள்ள அரசாங்க சேவை பதவி நியமனங்களுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளுக்கு பரீட்சார்த்திகளின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

4. **பரீட்சை முறை.**- இப்பரீட்சை பின்வரும் 3 வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் :-

| | | |
|---|---|---|
| (1) | கிரகித்தல் (காலம் : 2 மணித்தியாலம்) | - 50 புள்ளிகள் |
| (2) | நுண்ணறிவு (காலம் : 1 1/4 மணித்தியாலம்) | - 150 புள்ளிகள் |
| (3) | பொது அறிவு (காலம் : 03 மணித்தியாலம்) | - 150 புள்ளிகள் |
| | மொத்தம் | - 350 புள்ளிகள் |

*கிரகித்தல் வினாத்தாள்.*- இவ்வினாத்தாள் சிறிய பந்திகளின் உருவில் வழங்கப்பட்டுள்ள வினாக்களைக் கொண்டிருக்கும் அப்பந்தியில் அடங்கியுள்ள முக்கியமான விடயங்களை இயன்றவரை சுருக்கி ஒரு தனிவாக்கியத்தில் தருவதற்கு வேண்டப்படுவர். அத்துடன் கோடிடப்பட்ட சொற்கள் தொடர்பாக பரீட்சார்த்தியின் விபரிக்கும் ஆற்றல் பரீட்சிக்கப்படும். சில பந்திகளில் பலவாறான வினாக்கள் காணப்படும். அவற்றுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்வதற்கு பரீட்சார்த்தி எதிர்பார்க்கப்படுவர். சில பந்திகள் பல விடைகளைப் பின்னணியாகக் கொண்ட கிரகித்தல் வினாக்களைக் கொண்டிருக்கும். பரீட்சார்த்தியினுடைய விளங்கிக் கொள்ளும் ஆற்றல் பரீட்சிப்பதன் அடிப்படையில் கேள்விகள் அமைக்கப்பட்டிருக்கும். மேலும் ஒரு நீண்ட பந்தி சுருக்கி எழுதுவதற்காக வேண்டப்படுவர். இவ் வினாத்தாள் 02 மணித்தியாலங்களைக் கொண்டதாக அமையும்.

*நுண்ணறிவு.*- இவ்வினாத்தாள் பரீட்சார்த்தியின் பகுத்தறியும் ஆற்றல், ஆய்வுத்திறன், தீர்மானம் எடுத்தல் என்பவற்றைப் பரீட்சிக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டிருக்கும். இவ்வினாத்தாள் 1 1/4 மணித்தியாலங்களைக் கொண்டதாக இருக்கும்.

*பொது அறிவு.*- இவ்வினாத்தாள் தேசிய பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியாக உள்ள பல தரப்பட்ட அமைப்புச் சுற்றாடல்களிலும், எமது சமூகத்திலும் நிலவுகின்ற சமூக, அரசியல், பொருளாதார, கல்வி கலாச்சார விஞ்ஞானம் தொடர்பாக பரீட்சார்த்தியின் அறிவைப் பரீட்சிப்பதற்கான வினாக்களைக் கொண்டிருக்கும். இவ்வினாத்தாள் விரும்பும் வினாக்களைத் தெரிவு செய்யக்கூடியதாக அமைந்திருக்கும். இவ்வினாத்தாள் 03 மணித்தியாலங்களைக் கொண்டதாகும்.

**குறிப்பு**.- (i) இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடத்தப்படும். பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்காக விண்ணப்பித்த மொழிமூலம் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக் கப்படமாட்டாது.

(ii) பரீட்சையின்போது பரீட்சார்த்திகளின் எழுத்துக்கள் வடிவில்லாமலும், எழுத்துப் பிழைகளும் காணப்பட்டால் அவற்றுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும். அழகான எழுத்துக்களைக் கொண்டிராத பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையற்றவர்களாகக் கருதப்படுவர்.

(iii) அனுமதி அட்டைகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும். பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்குவதை அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எல்லாத் தகுதிகளையும் கொண்டுள்ளார் என கருதலாகாது.

5. **தெரிவுமுறை.**- 2010.10.12 ஆந் திகதிய 1675/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலினூடாக திருத்தப்பட்ட இலங்கை நில அளவையாளர்கள் சேவை பிரமாணக் குறிப்புகளின்படி நடத்தப்படும் போட்டிப்பரீட்சையில் ஒவ்வொரு வினாத்தாளுக்கும் குறைந்த பட்சம் 40 வீதமான புள்ளிகளை உதாரணமாக "கிரகித்தல்" வினாத்தாளுக்குரிய 50 புள்ளிகளில் 40% = 20 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகள், அவர்கள் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்குவரிசையிலும், நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப்பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகள் மாத்திரமே கவனத்தில் கொள்ளப்படும்.

6. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்பு இப்பதவிக்கு வேண்டப்பட்ட எல்லாத்தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7. **விண்ணப்பிக்கும் முறை**.- (i) மாதிரி விண்ணப்பப்படிவம்.- இவ்வறிவித்தலின் முடிவில் வழங்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவம் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது பின்பற்றப்பட வேண்டும். விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு அவர்கள் தோற்றும் மொழிமூலத்தில் அவர்களுடைய விண்ணப்பங்களைத் தயாரிக்க வேண்டும். மேலும் அவர்கள் விண்ணப்பங்களை அவர்களுடைய சொந்த கையெழுத்தினால் நிரப்ப வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் தலைப்புப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மொழிமூலப் பரீட்சார்த்திகள் சிங்கள மொழி மூலத்திற்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறே தமிழ் மொழிமூலப் பரீட்சார்த்திகளும் தமிழ் மொழிக்கு மேலதிகமாக பரீட்சையின் பெயரை ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பப் படிவத்திலுள்ள ஒவ்வொரு பிரிவும் அதில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய கண்டிப்பாக பூரணப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பதாரிகள் அவர்களுக்கு ஏற்புடையதாகாத ஏதேனும் பகுதிகளை ''ஏற்புடையதல்ல'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரிகள், நிரப்பப்படாத நிரல்களைக் கொண்ட ஏதேனும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை கண்டிப்பாகக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இல்லாத மற்றும் முறையாகப் பூர்த்தி செய்யப்படாத சகல விண்ணப்பங்களும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பரீட்சார்த்திகள் தாங்கள் அனுப்பும் விண்ணப்பத்தின் ஒரு பிரதியை தங்களுடன் வைத்திருப்பது அவர்களுக்கு பிரயோசனமானதாக இருக்கும். மேலும் விண்ணப்பதாரி, இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய அவரால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் அமைந்திருக்கிறதா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லையேல் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

(விண்ணப்பங்கள் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய A4 அளவுத்தாளில் தயாரிக்கப்பட வேண்டியதுடன் இலக்கம் 01 இலிருந்து 07 வரையான கூடுகள் முதலாம் பக்கத்திலும், 08 இலிருந்து 12 வரையான கூடுகள் இரண்டாவது பக்கத்திலும் தயாரிக்கப்பட வேண்டும்.)

(ii) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2013, மாச்சு 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு ''பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை'' எனும் முகவரியை அடையக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத்திகதியின் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பரீட்சையின் பெயர், விண்ணப்பத்தைக் கொண்டிருக்கும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

(iii) பரீட்சைக் கட்டணமான ரூபா 1,000 வை நில அளவைத் திணைக்களத்தின் பொது வைப்பு கணக்கு இலக்கம் 15/143 இன்கீழ் வரவு வைப்பதற்காக ஏதாவது மாவட்ட நில அளவை அலுவலகத்தில் அல்லது நில அளவையாளர் நாயகம் அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தின் உரிய பகுதியில் கழராதவாறு நன்கு ஒட்டப்படுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் ஒரு பிரதியை உங்களுடன் வைத்திருப்பது உங்களுக்கு பயனுடையதாக இருக்கும்.

(iv) தற்போது அரசாங்க திணைக்களங்கள்/ சபைகள்/ கூட்டுத்தாபனங்கள் போன்றவற்றில் பணிபுரியும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட தமது திணைக்களத் தலைவரினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும். ஆகையால் விண்ணப்பதாரிகள் தமது பூர்த்திசெய்த விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு 2013, மாச்சு 15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியவாறு அனுப்புவதற்காக தமது திணைக்களத் தலைவரிடம் உரிய நேரத்தில் கையளிக்கவேண்டும். விண்ணப்பங்கள் நில அளவையாளர் நாயகம் அல்லது வேறு எவரேனும் திணைக்கள உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட பெயரில் அனுப்பப்படக்கூடாது. திணைக்களத் தலைவரினூடாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள், விண்ணப்ப முடிவுத்திகதியின் பின் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது. அரசாங்க சேவையிலிருந்து கொண்டு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள், விண்ணப்பங்கள் நிராகரிக் கப்படாமல் இருப்பதற்கு விண்ணப்பத்தில் அவர்களின் கையொப்பத்தை உறுதிப்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட திணைக்கள/ நிறுவனத் தலைவரின் கையொப்பமும் உத்தியோகபூர்வ இலச்சினையும் பெறப்பட வேண்டும்.

(v) **உறுதிப்படுத்தல்**.- பரீட்சார்த்தியினுடைய ஆளடையாளம், அரசாங்க சேவையிலுள்ள ஒரு பரீட்சார்த்தியின் விடயத்தில் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரினால் அல்லது வேறு எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஏனைய பரீட்சார்த்திகளின் விடயத்தில் ஒரு சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு, அரசாங்கப் பாடசாலை அதிபர் அல்லது கல்விப்பணிப்பாளரின் கட்டுப்பாட்டிலுள்ள பாடசாலை அதிபர், தரைப்படை, கடற்படை, விமானப்படையின் ஆணையிடும் தரத்திலுள்ள அதிகாரிகள், மாதாந்த திரட்டிய சம்பளம் ரூபா 22,935 அல்லது அதற்கு மேல் சம்பளம் பெறும் அரசாங்க நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர்கள், புத்தவிகாரைகளுக்குப் பொறுப்பான பிக்கு, புத்தபிக்குகளின் தலைமைப் பிக்கு, ஏனைய வணக்கத் தலங்களுக்குப் பொறுப்பானவர்கள் அல்லது ஏனைய மதங்களைச் சேர்ந்த பிரபல்யம் வாய்ந்த சமயப் பெரியார்கள் ஆகியோரில் எவரேனும் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

8. **பரீட்சைக்கான அனுமதி அளித்தல்**.- பரீட்சை ஆணையாளர் நாயகம் ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் அனுமதி அட்டை அனுப்பி வைப்பார். பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரிகள் அவர்களது அனுமதி அட்டைகளை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

ஒவ்வொரு பரீட்சார்த்தியும் அவர்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். எவரேனும் ஒரு பரீட்சார்த்தி அவருக்கு குறித்தொதுக்கப்பட்ட பரீட்சைக்காக மண்டபத்தைத் தவிர்ந்த வேறு ஏதேனும் பரீட்சை மண்டபத்திற்கு பரீட்சை தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டார். பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் அவரது அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் பரீட்சை தொடங்கும் முதல் நாளில் சமர்ப்பித்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் யாவரும் கவனிக்கவேண்டிய பொதுவான நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் பகுதி I: தொகுதி (II அ) இல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. சகல பரீட்சார்த்திகளும் அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைவாக நடப்பதற்கு வேண்டப்படுகிறார்கள். பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பப்பட்டதும் அதுபற்றிய அறிவித்தல் ஒன்று இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும். அவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 02 அல்லது 03 தினங்களின் பின்னரும் அனுமதி அட்டையை விண்ணப்பதாரி ஒருவர் பெற்றுக்கொள்ளாவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அது பற்றி இலங்கை பரீட்சை திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்கள் வசம் உள்ள விண்ணப்பப் படிவம் மற்றும் பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு என்பவற்றின் அத்தாட்சிப்படுத்திய பிரதிகள், பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டு, கொழும்பிற்கு வெளியேயுள்ள பிரதேசங்களாயின் அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய

தொலைநகல் (பக்ஸ்) இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு உமது விண்ணப்ப கடிதத்தை இலங்கை பரீட்சை திணைக்களத்திற்கு காலதாமதமின்றி அனுப்பி வைப்பதுடன் அவற்றின் பிரதிகளை தங்களுடன் வைத்திருப்பது தங்களுக்கு பயனுள்ளதாகும்

பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை வழங்குவதை பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகுதிகளையும் பெற்றுள்ளார் என்று கருதலாகாது. பரீட்சையை நடத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்ட விதிகளுக்கமைய நடந்துகொள்வதற்கு சகல பரீட்சார்த்திகளும் வேண்டப்படுகிறார்கள். அத்தகைய விதிகளை மீறும் ஒரு பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாவார்.

9. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்தி ஒருவர் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடங்கள் தொடர்பாகவும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு வேண்டப்படுவர். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும்:-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை சமர்ப்பிக்கத் தவறும் எவரேனும் பரீட்சார்த்தியின் பரீட்சார்த்தி நிலை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பிரகாரம் இரத்துச் செய்யப்படும்.

10. **பரீட்சைத் தகைமைகளுடன் சம்பந்தப்பட்ட ஆவணங்கள்**.- (i) விண்ணப்பத்துடன் பணம் செலுத்திய பற்றுச்சீட்டைத் தவிர வேறு எந்த ஆவணங்களும் இணைக்கப்படக் கூடாது. ஆனால் வேண்டப் பட்டவாறு, பரீட்சைத் தகைமைக்குத் தேவையான விபரங்கள் அனைத்தும் விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். சகல விண்ணப்பங்களும் எல்லா விடயங்களையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். சரியாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் ;

(ii) நேர்முகப் பரீட்சையொன்றுக்கு அழைப்பதற்கு தகைமை பெற்ற பரீட்சார்த்திகள், நேர்முகப் பரீட்சையின்போது தமது தகைமைத் திறன்களை ஆவணச் சான்றிதழ்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் நிரூபித்தல் வேண்டும் ;

(iii) பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் :-

(அ) பொறுப்பு வாய்ந்த நபர் ஒருவரிடமிருந்து பெற்ற நல்லொழுக்கச் சான்றிதழ் ஒன்று ;

**குறிப்பு**.- இச்சான்றிதழ் சமாதான நீதவான், சட்டத்தரணி, பரீட்சார்த்தி வசிக்கும் பிரதேசத்தின் பிரதேசச் செயலாளர் அல்லது ரூபா 22,935 அல்லது அதற்கு மேல் திரட்டிய மாதாந்த சம்பளத்தைப் பெறுகின்ற நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் அல்லது நேரடியாக தகவல் பெறக்கூடிய எவரேனும் பிரசித்தமான நபர் ஒருவரிடமிருந்து பெறப்படுதல் வேண்டும். அச்சான்றிதழில் உறுதிப்படுத்துபவரின் பெயர், பதவிப் பெயர், முகவரி என்பன தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

அரசாங்க சேவைகளில் நிரந்தரப் பதவிகளை வகிக்கும் விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கச் சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை.

(ஆ) பிறப்புப் பதிவேட்டின் ஒரு உறுதிப்படுத்தப்பட்ட பிரதி (பிறப்பை பதிவு செய்யாத விண்ணப்பதாரியின் விடயத்தில்) அல்லது பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட பரீட்சார்த் தியின் வயது தொடர்பான அனுமானச் சான்றிதழ் ;

**குறிப்பு**.-

(i) பாடசாலையில் பாவிக்கும் நோக்கத்திற்காக அல்லது கல்வி நடவடிக்கைகளுக்காக வழங்கப்படும் விசேட பிறப்புச்சான்றி தழ்களோ அல்லது பிறப்புப் பதிவேட்டிலிருந்து பிரித் தெடுக்கப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட பகுதிகளோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது ;

(ii) சத்தியக்கடதாசிகளோ அல்லது ஞானஸ்நானம் பெற்ற சான்றிதழ்களோ பிறப்புச்சான்றிதழ்களுக்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பிறப்புச் சான்றிதழில் உள்ள பெயர்/பெயர்களுக்கும் பரீட்சைக்குத் தோற்றும் பரீட் சார்த்தியின் விண்ணப்பத்தில் உள்ள பெயர்/பெயர்களுக்கும் இடையில் ஏதேனும் வித்தியாசம் காணப்பட்டால், விண்ணப்ப தாரியின் பிறப்புச் சான்றிதழில் உள்ள பெயர்/பெயர்களை பிறப்பு, இறப்புப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் இல. 27 அல்லது 28 (அத்தியாயம் : 110) இல் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு அமைவாக சரியாக திருத்திப் பெறுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் ;

(iii) விண்ணப்பதாரி, பதிவின் மூலம் ஒரு இலங்கைப் பிரஜை அல்லது விண்ணப்பதாரி பரம்பரையினால் இலங்கைப் பிரஜை எனும் அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுக்கடிதம் (பொருத்தமானவாறு) ;

(iv) கல்விச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் அல்லது சான்றிதழ்கள் விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்படாவிட்டால் அச்சான்றிதழ்களை செயன்முறைப்படுத்துவதற்கான வேறு ஏதேனும் உத்தியோகபூர்வமான கடிதங்கள் அதாவது விண்ணப்பதாரி அவருடைய இறுதிப்பட்டப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளார் என்று பட்டச்சான்றிதழை நடைமுறைப் படுத்தக்கூடியவாறான சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தின் பதிவாளரினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வக் கடிதம்.

(v) இப்பதவிக்காக விண்ணப்பிக்கும்போது விண்ணப்பதாரிகள் இப்பதவிக்குத் தேவையான தகைமைகளைப்பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள். பரீட்சார்த்தி ஒருவர், வேண்டப்படும்போது தேவையான தகைமைகளைச் சமர்ப்பிப்பதற்கு தவறும் பட்சத்தில் அல்லது அத்தகைய தகைமைகளை சமர்ப்பிப்பதில் தாமதங்கள் ஏற்படுமிடத்து அவர் இப்பதவிக்கு தகைமையற்றவராகக் கருதப்படுவார்.

11. **பொய்யான தகவல் வழங்குதல்**.- இப்பரீட்சைகளின் நியதிகளின்படி, இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எவரேனும் பரீட்சார்த்தி தகைமையற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் அவருடைய பரீட்சார்த்தி உரிமை பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடைபெறும் காலத்திலோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்த நேரத்திலும் இரத்துச் செய்யப்படலாம். ஒரு பரீட்சார்த்தியின் சேவைக்காலத்தின் போது, அவர் முக்கிய தகவல்களை வேண்டுமென்றே மறைத்திருந்தால் அல்லது அவருடைய அறிவுக்கெட்டியவரையில் ஏதேனும் பிழையான தகவல்களை வழங்கியிருந்தால் அல்லது இப்பரீட்சைக்காக வேண்டப்பட்ட தேவையான தகைமைகளை பூர்த்திசெய்யவில்லை என உறுதிப்படுத்தப் பட்டால் குறித்த நபர் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படலாம்.

இவ்வறிவித்தலில் உள்ள அவசியமான தேவைப்பாடுகளை முறையாக பூர்த்தி செய்யாத எவரேனும் விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படும்.

12. இந்நிபந்தனைகளில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயங்கள் நிலஅளவையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பிரகாரம் தீர்மானிக்கப் படும்.

எஸ். எம். டபிள்யூ. பர்னாந்து,
நிலஅளவையாளர் நாயகம்.

இலங்கை நிலஅளவைத் திணைக்களம்,
இல. 150, கிருல வீதி,
நாராஹேன்பிட்டி,
கொழும்பு 5,
2013.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிலஅளவைத் திணைக்களம்**

**இலங்கை நில அளவைத் திணைக்களத்தில் பயிலுனர் நில அளவையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013**

**Open Competitive Examination for Recruitment to the Posts of Apprentice Surveyors in the Survey Department of Sri Lanka - 2013**

[ ]
(அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்.)

1.0 பரீட்சைக்கு நீர் தோற்றுகின்ற மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 [ ]
(பொருத்தமான இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்)

2.0 பெயர் :

2.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலப் பெரிய எழுத்தில்) : ----.
உ+ம் : SILVA A. B.

2.2 முழுப்பெயர் (ஆங்கிலப் பெரிய எழுத்தில்):----.

2.3 முழுப்பெயர் (சிங்களம்/தமிழில்):----.

3.0 முகவரி :-

3.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்):----.

3.2 நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழில்):----.

3.3 அலுவலக முகவரி (ஆங்கிலப் பெரிய எழுத்துகளில், ஏற்புடையதாகவிருந்தால்) :----.

3.4 அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய தபால் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

4.0 4.1 பால் :-

பெண் - 1, ஆண் - 0 [ ]
(பொருத்தமான இலக்கத்தைக் கூட்டில் குறிப்பிடவும்)

4.2 பிறந்த திகதி:-

ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

4.3 2013.03.15 ஆந் திகதியன்று வயது :-

வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

5.0

5.1 தேசிய இனம் :-
சிங்களம் - 1
தமிழ் - 2
இந்தியத்தமிழ் - 3
முஸ்லிம் - 4
ஏனையவை - 5 [ ]
(பொருத்தமான இலக்கத்தைக் கூட்டில் குறிப்பிடவும்)

6.0 6.1 பெற்றுள்ள பட்டம் :
அளவையியல் விஞ்ஞான விஞ்ஞானமாணிப் பட்டம் - 1
பௌதீகவியல் (கணிதம் அடங்கலாக) விஞ்ஞானமாணிப் பட்டம் - 2
கணனி விஞ்ஞான விஞ்ஞானமாணிப் பட்டம் - 3
சிவில் எந்திரவியல் பட்டம் - 4 [ ]
(பொருத்தமான இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

6.2 க. பொ. த. (உ.த.) பரீட்சை சித்தியெய்திய வருடம் :----.
பரீட்சை சுட்டிலக்கம் :----.
சித்தியெய்திய பாடங்கள் :----.

7.0 7.1 தேசிய அடையாள அட்டை இல. :-

[ | | | | | | | | | | ]

7.2 வழங்கப்பட்ட திகதி :----.

8.0

(i) பட்டம் பெற்ற திகதி :----.
(ii) பல்கலைக்கழகம்/நிறுவனம் :----.
(iii) பதிவு செய்யப்பட்ட இலக்கமும் திகதியும் :----.
(iv) வெளிவாரி/உள்வாரி :----.
(v) பட்டப்பெயர் :----.
(vi) பாடங்கள் :----.
(vii) பெற்ற வகுப்பு :----.
(viii) மேல்பிரிவு/கீழ்பிரிவு :----.
(ix) சுட்டிலக்கம் :----.
(x) பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் :----.

9.0 பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கு கழராதவாறு ஒட்டவும். பற்றுச்சீட்டின் பிரதியொன்றை உங்களுடன் வைத்திருக்கவும்.

| பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கு நன்கு ஒட்டவும். |
|---|

*10.0* ***விண்ணப்பதாரியின் உறுதியுரை :-***

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கெட்டிய வரையில் உண்மையானதும், சரியானதும் என்றும், .......... மாவட்ட நில அளவை அலுவலகத்தில்/ நில அளவையாளர் நாயகம் அலுவலகத்தில் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ............ ஆம் இலக்க ............ ஆந் திகதிய பற்றுச் சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் இத்தால் வெளிப்படுத்து கிறேன். மேலும் இப்பரீட்சையின் விதிகள் பிரமாணங்களுடன் இணங்கி நடப்பதற்கும், இப்பரீட்சை நிபந்தனைகளின் படி தகைமையற்றவர் எனக் கண்டுபிடிக்கப் பட்டால் பரீட்சைக்கு முன்போ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சைக்குப் பின்போ பரீட்சார்த்தி நிலையை இரத்துச் செய்வதற்கு எடுக்கப்படும் எந்தவொரு முடிவுகளையும் நான் ஏற்றுக்கொள்வதற்கும் இணங்குகிறேன்.

-----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

*11.0* ***விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :***
(பந்தி 07 இல் உள்ளவாறு இருத்தல் வேண்டும்.)

மேற்படி விண்ணப்பதாரி, திரு./திருமதி/செல்வி ............................. ............................... (முழுப்பெயர்) எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் என்றும் அவர், அவருடைய கையொப்பத்தை என் முன்னிலையில் ................................... ஆந் திகதியன்று இட்டார் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :----.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.

*12.0* ***திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :-***
(ஏற்புடையதாக இருந்தால் மட்டும்)

மேற்படி விண்ணப்பதாரி, திரு./திருமதி/செல்வி .......................... .................. இந்த திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபையில் பணியாற்றுகின்றார் என்றும் அவர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும், அப்பற்றுச்சீட்டு விண்ணப்பத்தில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் அவர் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்கமுடியும்/விடுவிக்கமுடியாது என்றும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

வேறு விடயங்கள் :----.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவிப்பெயர் :----.
திணைக்களத் தலைவரின் கையொப்பம் :----.
பதவி முத்திரை :----.
பதவி :----.
திகதி :-----.

*2-393*

## இரத்மலானை இலங்கை-ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்கு பயிலுனர்களை சேர்த்துக்கொள்ளல் - 2013

இரத்மலானை இலங்கை-ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்கு 2013 ஆம் வருடத்திற்காக பயிலுனர்களை சேர்த்துக் கொள்வதற்காக இங்கு 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்த தராதரங்களைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*2.* ***குறைந்த தராதரம்.-*** (அ) 2013.04.30 ஆந் திகதியன்று வயது வருடம் 16-25 இற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வித் தராதரம்.- சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட 6 விடயங்களில் க. பொ. த. (சா. தரம்) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு சித்தியடைந்திருத்தலுடன் முதல் தடவையில் குறைந்தது 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அக்கல்வித் தராதரத்தை 2013.04.30 இற்கு முன்பு பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்.

*3.* ***பயிற்சிநெறி.-*** பயிலுனர் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படும் பயிலுனர்களுக்கு கீழ்க்காணப்படும் தொழில் பயிற்சியை அத்தொழிலுக்கு ஏற்ற காலவெல்லைக்குள் கற்பதற்கு இடமளிக்கப்படும். பயிற்சி நெறி சிங்கள மொழி மூலம் மாத்திரமே நடாத்தப்படும். கீழ்க்காணப்படும் தொழில் பயிற்சிக்கு 25 பேர் வீதம் தேர்ந்தெடுக்கப்படுவர் :-

| | |
|---|---|
| (1) டீசல் என்ஜின் இயந்திர நுட்பவியலாளர் | - வருடம் 2 1/2 |
| (2) ஒட்டும் நுட்பவியலாளர் | - வருடம் 3 |
| (3) மின் நுட்பவியலாளர் (சக்தி) | - வருடம் 3 1/2 |
| (4) இயந்திரவியலாளர் (பொது) | - வருடம் 3 1/2 |

***விண்ணப்பங்கள்.-*** விண்ணப்பதாரியினால் இதன்கீழ் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தட்டச்சு கடதாசியில் (ஏ4) கடதாசியில் தயாரித்து முழு விபரமும் சரியான முறையில் குறிப்பிடல் வேண்டும். தேவையான தகவல்கள் உள்ளடக்கப்படாத விண்ணப்பப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

*4.* ***பயிற்சிநெறிக்கு தேர்ந்தெடுத்தல்.-*** (1) பயிற்சிநெறிக்கு தேர்ந்தெடுத்தல் எழுத்துமூல மற்றும் தொழில் பரிசோதனை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவதுடன் தேவையான குறைந்த தராதரங்களை உடையதும் 7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணம் செலுத்திய விண்ணப்பதாரிகள் மாத்திரம் எழுத்துமூல பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(2) எழுத்துமூல பரீட்சை கணிதம் மற்றும் அடிப்படை தொழில்நுட்ப அறிவும் பொது அறிவையும் அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்படும். எழுத்துமூல பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்ப தாரிகள் அந்தந்த பயிற்சிநெறியின் தன்மைக்கு ஏற்ப தொழில் மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

(3) எழுத்துமூல மற்றும் தொழில் பரிசோதனையில் கூடிய முழுப்புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் அந்தந்த பயிற்சி நெறிக்கு தேர்ந்தெடுக்கப்படுவர்.

*6.* ***பரீட்சை மொழிமூலம்.-*** பரீட்சை, சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

*7.* ***பரீட்சைக் கட்டணம்.-*** இப்பரீட்சைக்காக மீண்டும் வழங்கப்படாத ரூபா 500 பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும். அக்கட்டணம்

மருதானை தபால் அலுவலகத்தில் மாற்றிக்கொள்ளக்கூடியவாறு "புகையிரத முகாமையாளர்" எனும் பெயருக்கு எழுதப்பட்ட காசுக் கட்டளை மூலம் செலுத்தப்படல் வேண்டும். அவ்வாறு பெறப்பட்ட காசுக் கட்டளையை விண்ணப்பதாரியின் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். காசுக் கட்டளை இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றாத காரணத்தினாலோ அல்லது வேறேதும் காரணத்திற்காகவோ பரீட்சைக் கட்டணம் மீண்டும் வழங்கப்பட மாட்டாது.

8. **பரீட்சை நிலையம்.**- சகல தராதரங்களையும் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளுக்காக கொழும்பில் மாத்திரம் பரீட்சை நடாத்தப்படும்.

9. **ஒப்பந்தம் கைச்சாத்திடல்.**- நிறுவனத்தின் பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்படும் சகல விண்ணப்பதாரிகளும் பயிற்சிநெறிக்கு ஏற்ற காலவெல்லைக்குள் பயிற்சியை திருப்திகரமான முறையில் பயிலுவதாக தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையுடன் ஒப்பந்தமொன்றுக்கு இணங்குதல் வேண்டும்.

10. பயிற்சியைப் பெறும் காலவெல்லைக்குள் பயிலுனர்களுக்காக தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையினால் மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படும்.

11. பயிற்சியின் பின்பு திணைக்களம் தொழில் வழங்காது.

12. கீழ்க்காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப விண்ணப்பப்படிவத்தை தயாரித்து, "பணிப்பாளர், இலங்கை புகையிரத ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிலையம், கல்தமுல்ல வீதி, இரத்மலானை" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். (விண்ணபத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இஜேபுதொபநி - 2013" எனக் குறிப்பிடல் வேண்டும்.

13. **விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி.**- விண்ணப்பப்படிவம் 2013.05.30 ஆந் திகதிவரை ஏற்றுக்கொள்ளப் படுவதுடன் தாமதித்து கிடைக்கும் விண்ணப்பப்பத்திரம் நிராகரிக்கப் படும்.

பி. ஏ. பி. ஆரியரத்ன,
புகையிரத முகாமையாளர்.

புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம்,
இலங்கை புகையிரத சேவை,
கொழும்பு 10,
2013.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இரத்மலானை இலங்கை-ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்கு பயிலுனர்களை சேர்த்துக்கொள்ளல் - 2013**

1. முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) :----.
   (ஆங்கிலத்தில்) :----.

2. முகவரி (சிங்களம்/தமிழ்/ :----.
   (ஆங்கிலத்தில்) :----.

3. மாவட்டம் :----.

4. பிறந்த திகதி :----.

5. பால் (ஆண்/பெண்) :----.

6. கல்வித் தராதரம் (க. பொ. த. சாதாரண தரம்) :

**முதலாம் தடவை**

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| 1.<br>2.<br>3.<br>4.<br>5.<br>6.<br>7.<br>8. | |

**இரண்டாம் தடவை**

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| 1.<br>2.<br>3.<br>4.<br>5.<br>6.<br>7.<br>8. | |

7. பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :----.

8. விண்ணப்ப அறிவித்தலின்படி தேர்ந்தெடுத்துள்ள தொழில் பயிற்சி :

   1. ----------------.

   2. ----------------.

9. ---------------- தபால் அலுவலகத்திற்கு ரூபா 500 ஐச் செலுத்திப் பெற்றுக்கொண்ட இலக்கம் ---------------- ஐ உடைய காசுக் கட்டளையை இத்துடன் இணைத்துள்ளேன்.

10. மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதெனவும் சரியானதெனவும் நான் உறுதிமொழிகிறேன். இங்கு குறிப்பிடப் பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் பொய்யானதென நான் தேர்ந்தெடுப்பதற்கு முன்பு கண்டுபிடிக்கப்படுமிடத்து நான் தகுதியற்றவராக கருதப்படுவதற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்பு கண்டறியப்படுமிடத்து பயிற்சியிலிருந்து விலக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நன்கறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

2-520

## இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இல் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விசேட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2012 (2013)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் III இற்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான விசேட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக தகைமை பெற்ற இலங்கைப் பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த அறிவித்தலில் ''சேவையில்'' எனும் பதமானது இலங்கைக் கணக்காளர் சேவை (இ.க.சே.) எனப் பொருள்படும்.

1. **பரீட்சைத் திகதி**.- பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2013 ஏப்பிறல் மாதத்தில் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இப்பரீட்சை நடாத்தப்படும். இப்பரீட்சையை பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு. பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் முடிவே இறுதி முடிவாகும்.

2. **நியமிக்கும் உத்தியோகத்தரின் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி**.- இது அரசாங்க சேவைகள் ஆணைக்குழு வின் கட்டளையின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

3. **சேவை நிபந்தனைகள்**.- அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கும், பொது நிபந்தனைகளுக்கும், இலக்கம் 1670/33 மற்றும் 2010 செப்தெம்பர் மாதம் 10ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பின் மூலம் விதிக்கப்பட்டுள்ள சேவை நிபந்தனைகள் மற்றும் அதில் செய்யப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் செய்யக்கூடிய நிபந்தனைகளுக்கும் கட்டுப்படும் வகையில் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

3.1 இப்பரீட்சை மூலம் நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்படும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண வெற்றிடங்களின் எண்ணிக்கை 22 ஆகும்.

3.2 தெரிவு செய்யப்படுவோர் நியமனத் தினத்திலிருந்து ஆகக் குறைந்தது பத்து வருடகாலம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பணியாற்றுதல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறும் பட்சத்தில் அவர்களது சேவை முடிவுறுத்தப்படும்.

3.3 தம்மிடம் வழங்கப்படுகின்ற கடமைக்குரிய பொறுப்புக்களை உரிய தினத்தன்று பொறுப்பேற்பதற்கு தவறும் மற்றும்/ அல்லது நியமிக்கப்படும் பதவி ஒன்றில் அல்லது பிரதேசத்தில் கடமையினைப் பொறுப்பேற்கத் தவறும் விலகும் விண்ணப்பதாரரின் நியமனம் முடிவுறுத்தப்படுவதற்கு இடமுண்டு.

3.4 விசேட பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற உத்தியோகத்தர்கள் இலங்கைக் கணக்காளர் சேவை உத்தியோகத்தர்களுக்கான 1 ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை மற்றும் 5 வருடங்களுக்குள் சிங்கள மொழிப் பரீட்சை ஒன்றிலே சித்தியடைதல் வேண்டும். (பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 07/2007 மற்றும் ஏற்பாடுகளின் பிரகாரம்)

4. **கட்டமைப்பு மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம்**.- 2006.04.25 ஆந் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இன் எஸ்.எல் 1-2006 சம்பள அளவுத் திட்டத்தின் பிரகாரம்,

மாதாந்தச் சம்பள அளவுத் திட்டம்.- SL1 - ரூ. 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூ.53,555 ஆகும்.

(ரூ. 24,870 மற்றும் ரூ. 26,805 இற்கு முன்னர் வினைத்திறன்காண் தடைகள் இரண்டு உண்டு.)

5.

5.1 அனுபவத்திற்கான தகைமைகள் :

(i) 5.2 (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள யாதேனுமொரு தகைமையுடன் 2013.03.18 ஆந் திகதியன்று (விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதி தினத்தன்று) அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் 5 வருடங் களுக்குக் குறையாத திருப்திகரமான, தொடர்ச்சியான நிரந்தர சேவைக்காலம் ஒன்றுடன் குறித்த தினத்தன்று ஆகக்குறைந்தது 5 சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

அல்லது

(ii) அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய எம்என் 1-2006(ஏ) எனும் சம்பள அளவுத்திட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட சம்பள அளவுத்திட்டம் ஒன்றினை உடைய பதவி ஒன்றிலே 10 வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவைக்காலம் ஒன்றினைப் பூர்த்திசெய்திருத்தல் மற்றும் ஆகக்குறைந்தது குறித்த தினத்தன்று 10 சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல்.

5.2 (அ) கல்வித் தகைமைகள் :

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலே வணிகம், முகாமைத்துவம், கணக்கியல், பொருளியல் ஆகிய பாடங்களுக்குரிய பட்டமொன்றினைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(ii) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில்/ இலங்கை உயர் தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் கணக்கியல் அல்லது வர்த்தகத் துறையில் உயர் டிப்ளோமா ஒன்றினைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(iii) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது வேறு யாதேனுமொரு பொதுநலவாய நாட்டின் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இடைநிலை அல்லது அதற்கு மேற்பட்ட பரீட்சை ஒன்றிலே சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

அல்லது

(iv) ஐக்கிய இராச்சியத்தின் அல்லது வேறு யாதேனுமொரு பொதுநலவாய நாடு ஒன்றின் பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகம் ஒன்றினால் நடாத்தப்படுகின்ற செலவினம் மற்றும் முகாமைத்துவப் பரீட்சையில் I மற்றும் II ஆம் பகுதிகள் அல்லது இடைநிலைப் பரீட்சை அல்லது அதைவிடவும் கூடுதலான பரீட்சை ஒன்றிலே சித்தியடைந்திருத்தல் ;

அல்லது

(v) ஐக்கிய இராச்சியத்தின் அல்லது வேறு யாதேனுமொரு பொதுநலவாய நாடு ஒன்றின் பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவகம் ஒன்றினால் நடாத்தப்படுகின்ற I ஆவது தொழில்சார் மட்டத்தில் அல்லது அதைவிடவும் கூடுதலான மட்டத்தைச் சேர்ந்த பரீட்சை ஒன்றிலே சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

அல்லது

(vi) ஐக்கிய இராச்சியத்தின் அல்லது வேறு யாதேனுமொரு பொதுநலவாய நாடு ஒன்றின் பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகம் ஒன்றினால் நடாத்தப்படுகின்ற I ஆவது மற்றும் II ஆவது பகுதிக்குரிய அல்லது அதைவிடவும் கூடுதலான மட்டத்தைச் சேர்ந்த பரீட்சை ஒன்றிலே சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

அல்லது

(vii) ஐக்கிய இராச்சியத்தின் செயலாளர்களின் மற்றும் நிருவாகிகளின் பட்டய நிறுவகத்தின் இறுதிப் பரீட்சை

மற்றும்

(viii) வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றுவதற்காக தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல் மற்றும் க.பொ.த. (சா. த.) பரீட்சையில் தமிழ் மொழியை பிரதான பாடமொன்றாக சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5.2 (ஆ) பிற தகைமைகள் - இதில் தோற்றும் விண்ணப்பதாரர் ஒருவர்,

(i) இலங்கைப் பிரஜை ஒருவராக இருத்தல் வேண்டும்.

(ii) சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றக்கூடியவாறு அனைத்து வழிகளிலும் உடல்சார் தகைமையினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(iv) விண்ணப்பிப்பதற்கு தகைமை பெறுவதற்கு முந்திய ஐந்துவருட காலப்பகுதியினுள் உரிய தினங்களில் அனைத்து சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல்.

(v) 2013.03.18 ஆந் திகதிக்கு முந்திய ஐந்து வருடகாலப் பகுதியினுள் திருப்திகரமான சேவைக்காலம் ஒன்றினைக் கொண்டிருத்தல்.

(vi) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு இரண்டு தடவைகளுக்கு மேல் தோற்றுவதற்கு எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் அனுமதி கிடையாது.

(vii) யாதேனுமொரு சமயத் தலைவராக பணியாற்றும் எவரும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற மாட்டார்.

(viii) சேவைக்கு நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளை பூர்த்திசெய்துள்ள ஒருவராகக் கருதப்படுவதற்கு விண்ணப்பதாரர் ஒருவர், 5(அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை 2013.03.18 ஆந் திகதியன்று அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். தகைமையினை உறுதிப்படுத்துவதற்காக சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

6. **பரீட்சைக் கட்டணம்**.- திறந்த போட்டிப் பரீட்சைக் கட்டணம் ரூ. 300 ஆகும். இக்கட்டணத்தை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்திற்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வைப்புச் செய்வதற்காக பிரதேசச் செயலகத்திற்கு அல்லது மாவட்டச் செயலகத்திற்குச் செலுத்துதல் வேண்டும். அந்த அலுவலகங்களிலிருந்து பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய பெட்டியினுள் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றினை விண்ணப்பதாரர்கள் தம்மிடம் வைத்துக்கொள்ளல் பயன்மிக்கதாக அமையும். இப்பரீட்சைக் கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்பட மாட்டாது.

7. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பத்தை இந்த அறிவித்தலுடன் இணைத்துள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி ஏ-4 அளவிலான கடதாசி ஒன்றில் தயாரித்து விண்ணப்பதாரரினாலேயே தெளிவாக நிரப்புதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 01 முதல் இலக்கம் 3.5 வரையில் முதற் பக்கத்தில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான மொழியிலேயே நிரப்புதல் வேண்டும். எவ்வாறாயினும் விண்ணப்பத்தினை தயாரிக்கும்போது அதன் தலைப்புக்களை தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியில் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) குறிப்பிடுதல் கட்டாயமானதாகும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இல்லாத விண்ணப்பப்படிவங்களும், முழுமையாக தகவல்களை வழங்காத விண்ணப்பப்படிவங்களும் எதுவித அறிவித்தலுமின்றி இரத்துச்செய்யப்படும். அந்த விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றினை தம்வசம் வைத்திருத்தல் பயனுடையதாக அமையும். பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கு ஏற்ப உள்ளனவா என்பது பற்றி விண்ணப்பதாரர் தேடிப்பார்த்தல் வேண்டும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் விண்ணப்பப்படிவம் இரத்துச்செய்யப்படும்.

(இ) பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் பதிவுத் தபாலில் 2013.03.18 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பெலவத்தை, பத்தரமுல்லையில் அமைந்துள்ள இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் III இற்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவுகின்ற

வெற்றிடங்களை நிரப்புவதற்கான விசேட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2012 (2013)" என தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். குறித்த தினத்திற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் எந்தவொரு விண்ணப்பப்படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்பட்ட உடனேயே அது பற்றி பத்திரிகைகளில் அறிவித்தலொன்று இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்களில் பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாத பட்சத்தில் அதில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்களிடம் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றினையும், பதிவுசெய்த பற்றுச்சீட்டினையும் கொழும்புக்கு வெளியிலாயின் பரீட்சை அனுமதிப்பத்திரத்தை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கமொன்று என்பன அடங்கிய உங்களது கோரிக்கைக் கடிதத்தையும் தம்மிடம் வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பது மிகவும் பயனுடையதாக அமையும்.

(ஈ) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது காணப்பட்ட விண்ணப்ப தாரரின் பதவி, சேவை நிலையம் மற்றும் பரீட்சை தொடர்பான அனைத்து பணிகள் தொடர்பாகவும் சம்பந்தப்படுவதுடன் விண்ணப்பம் அனுப்பியதன் பின்னர் அது தொடர்பாக ஏற்படக்கூடிய மாற்றங்கள் பற்றி கவனம் செலுத்தப்பட மாட்டாது.

8. **பரீட்சைக்குத் தோற்றுதல்.**- (அ) உரிய தினத்திற்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பியுள்ள சகலருக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒருவர் உரிய முறையில் கையொப்பத்தை உறுதிசெய்து தமது அனுமதிப்பத்திரத்தை பரீட்சை மண்டபத்திற்குப் பொறுப்பான அதிகாரியிடம் பெற்றுக்கொடுத்தல் வேண்டும். தமது அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் உரிய பரீட்சை மண்டபத்திற்குரிய அனுமதி அட்டை முதலில் அந்த மண்டபத்தில் தோற்றும் நாளன்று அதற்குப் பொறுப்பான அதிகாரியிடம் வழங்குதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு விதிகள் தொடர்பாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(இ) விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்றினை அனுப்பியுள்ளமை, அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை யுடையவர் என்று பொருள்கொள்ளக் கூடாது.

(ஈ) பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் உட்படுவர். அவ்வாறான சட்டதிட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனை ஒன்றிற்கு அவர் ஆளாக வேண்டி ஏற்படும்.

9. **விண்ணப்பதாரரின் ஆளடையாளம்.**- தாம் தோற்றும் சகல பாடங்களுக்கும் பரீட்சை மண்டபத்திற்குப் பொறுப்பான தலைமை அதிகாரி திருப்தியடையும் வகையில் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் யாதேனும் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப் படும்.

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை ;

(ஆ) குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் செல்லுபடியான கடவுச் சீட்டு.

விண்ணப்பதாரரின் அலுவலக அடையாள அட்டை ஏற்றுக்கொள்ளப் பட மாட்டாது.

10. **பொய்யான தகவல்களை வழங்குதல்.**- விண்ணப்பதாரர் ஒருவர் தகைமை பெறாதவர் என்று கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலப்பகுதியில் அல்லது அதன் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி நிலை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தி ஒருவர் வழங்கியுள்ள யாதேனுமொரு விடயம், அவர் போலியானதென தெரிந்து கொண்டே வழங்கியுள்ளமை கண்டுபிடிக்கப்படின், அல்லது யாதேனுமொரு முக்கிய விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு இடமுண்டு.

11. இந்த ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

12. **பரீட்சை முறை.**- பரீட்சை மொழிமூலம் : இப்பரீட்சையானது தமிழ் மொழியில் மாத்திரம் நடாத்தப்படும்.

13. **பரீட்சித்தல் முறை.**- (அ) பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய எழுத்து மூலப் பரீட்சை ஒன்று :

(i) பாட எண் 01 - நிதி கணக்கியல் - வினாத்தாள் I
(காலம் : 03 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்
(ii) பாட எண் 02 - நிதி கணக்கியல் - வினாத்தாள் II
(காலம் : 03 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்
(iii) பாட எண் 03 - செலவினம் மற்றும் முகாமைத்துவக் கணக்கியல் (காலம் : 03 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்
(iv) பாட எண் 04 - அரச நிதி முகாமைத்துவம்
(காலம் : 03 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்
(v) பாட எண் 05 - கணக்காய்வு மற்றும் விசாரணை
(காலம் : 03 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்
(vi) பாட எண் 06 - பொது விவேகம் மற்றும் கிரகித்தல்
(காலம் : 03 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்

பாடத்திட்டம் இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) நேர்முகப் பரீட்சை.- எழுத்து மூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஆகக் குறைந்தது 40% வீதப் புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள அபேட்சகர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்க வேண்டிய அபேட்சகர்களின் எண்ணிக்கையானது தேவைக்கேற்ப எழுத்து மூலப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் ஒழுங்குமுறை மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை என்பவற்றின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

14. **நியமனம் செய்வதற்கு தெரிவுசெய்யும் முறை.**- எழுத்து மூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள பரீட்சார்த்திகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்க வேண்டிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையானது தேவைக்கேற்ப எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட

புள்ளிகளின் ஒழுங்குமுறை மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை என்பவற்றின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

15. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிமூலம் வெளியிடப்படுகின்ற இந்த அறிவித்தலை ஒவ்வொரு மொழியிலும் வெளியிடும்போது யாதேனும் வித்தியாசம் காணப்படின் சிங்கள மொழியில் வெளியிடப்படும் அறிவித்தலே மேலோங்கி நிற்கும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

பீ. ஏ. அபேசேகர,
திறைசேரியின் பிரதிச் செயலாளர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2013, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இல் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விசேட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2012 (2013)**

SPECIAL LIMITED COMPETITIVE EXAMINATION FOR FILLING GRADE III VACANCIES OF THE SRI LANKA ACCOUNTANTS' SERVICE IN NORTHERN AND EASTERN PROVINCES - 2012 (2013)

| | |
|---|---|
| பரீட்சை இலக்கம் :<br>(அலுவலக பயன்பாட்டிற்காக) | |
| பரீட்சைக்குத் தோற்றும் நகரம் | நகர இலக்கம் |
| | |
| விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்ற உத்தேசித்துள்ள நகரம் மற்றும் நகர இலக்கம் என்பவற்றினைக் குறிப்பிடவும்.<br>(கொழும்பு - 1, யாழ்ப்பாணம் - 2)<br>(நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.) | |
| பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :<br>தமிழ் - 3<br>(உரிய இலக்கத்தைப் பெட்டியினுள் எழுதவும்) ☐ | |

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : Mr./Mrs./Miss .................................
   (உ+ம்) Mr. SILVA, A.B

   1.2 முழுப் பெயர் (தமிழில்) : ........................................

   1.3 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ................. ............................................

2. நிரந்தர முகவரி (தமிழில்) : ......................................

   2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : .................... ..........................................

   2.2 அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ...................................

3. 3.1 பால்: ஆண் - 0, பெண் - 1 ☐
   (உரிய இலக்கத்தை பெட்டியினுள் எழுதவும்)

   3.2 விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது பற்றி :
   விவாகமாகாதவர் - 1, விவாகமானவர் - 2 ☐
   (உரிய இலக்கத்தை பெட்டியினுள் எழுதவும்)

   3.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

   3.4 பிறந்த திகதி :
   ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

   3.5 2013.03.18 ஆந் திகதியன்று வயது :
   வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐
   (விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று)

4. 4.1 அறிவித்தலின் 5.1 ஆம் பந்தியின்கீழ் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறும் பொருட்டு பெற்றுள்ள தகைமை :....................................................

   4.2 (அ) அத்தகைமைகளைப் பெற்றுக்கொண்ட நிறுவனங்கள் :

| பணியாற்றியுள்ள நிறுவனங்கள் | பதவி | முதல் | வரை | கால எல்லை |
|---|---|---|---|---|
| | | | | |

   (ஆ) (i) சேவை/பதவி :----.
   (ii) வகுப்பு :---- ஆந் திகதி முதல்
   (iii) வகுப்பு :---- ஆந் திகதி முதல்
   (iv) 2013.03.18 ஆந் திகதியன்று வயது (விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று) அரசாங்கத்தின்கீழ் மொத்த சேவைக்காலம் : ----.

   வருடங்கள் :----. மாதங்கள் :----.

   (அ) மேற்படி ii இல் சேவைக்காலம்-
   வருடம் :----. மாதம் :----.

   (ஆ) மேற்படி iii இல் சேவைக்காலம்-
   வருடம் :----. மாதம் :----.

   (v) 2013.03.18 ஆந் திகதியன்று (விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று) வருடாந்த சம்பளம் :----.

5. 5.1 இலங்கைக் கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நீங்கள் தோற்றிய ஆண்டுகள் :

   1. -----
   2. -----
   3. -----

6. பணப்பற்றுச்சீட்டைக் கழராதவாறு இங்கே ஒட்டவும்.

(i) இலக்கம் :-----.
(ii) திகதி :-----.
(iii) பணம் செலுத்திய இடம் :-----.
(iv) செலுத்திய தொகை ரூ. :-----.

7. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

7.1 இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவின் பிரகாரம் சரியானவை எனவும், உண்மையானவை எனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய இலக்கம் .......................... மற்றும் ........................ ஆந் திகதிய பணப் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது எனவும், மேலும், பரீட்சை சட்டதிட்டங்களுக்கு ஏற்ப செயற்படு வதற்கும், இப்பரீட்சை தொடர்பான நிபந்தனைகளின் பிரகாரம் இதில் காணப்படும் தகவல்களில் ஏதும் பொய்யானவை அல்லது பிழையானவை என கண்டு பிடிக்கப்படும் பட்சத்தில் நான் தகுதியற்றவனாவதற்கும், எனக்கு எதுவித நஷ்டஈடும் வழங்காது என்னை சேவையில் இருந்து அகற்றுவதற்கும் உட்படுவதனை நான் அறிந்து வைத்துள்ளேன்.

7.2 2013.03.18 ஆந் திகதியன்று (விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று) முன்னைய ஐந்து வருட காலத்தினுள் (சேவை அல்லது திணைக்கள பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ற நிபந்தனை, சம்பள அதிகரிப்பு தவிர்ந்த) சம்பள அதிகரிப்புக்கள் அனைத்திலும் நான் சித்தியடைந்துள்ளேன் எனவும், (எச்சரிக்கை தவிர்ந்த) எதுவித ஒழுக்காற்று தண்டனைக்கு ஆளாகி இல்லை என்பதனையும் குறிப்பிட விரும்புகிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

8. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (தமது அந்தரங்க கோவைகள் பேணி வரப்படும் அலுவலகத் தலைவர் திணைக்களத் தலைவராக கையொப்பமிட வேண்டும் :**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ................ எனும் பெயருடைய விண்ணப்பதாரர் ................. ஆந் திகதி முதல் இந்த அலுவலகத்தில் பணியாற்றுவதாகவும், அவரது நடத்தை சிறந்ததெனவும், மேற்படி 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த அலுவலகத்திலுள்ள குறிப்புக்களின் பிரகாரம் தனிப்பட்ட முறையில் பரீட்சித்துப் பார்த்ததாகவும், 2013, ............................. மாதம் .......................... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பம் இட்டதாகவும் இத்தால் உறுதிப்படுத்து கின்றேன்.

..............................................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :.............................
பதவி :..........................................................
முகவரி : (இறப்பர் முத்திரை ஊடாக உறுதிப்படுத்தல் வேண்டும்.)
திகதி :..........................................................

**குறிப்பு** : உறுதிப்படுத்துபவர் சமாதான நீதவான் ஒருவராக, சத்தியப்பிரமாண ஆணையாளராக, சட்டத்தரணி ஒருவராக, நொத்தாரிசு ஒருவராக அல்லது வருடமொன்றிற்கு ரூ. 2,40,360 இற்குக் குறையாத இணைந்த சம்பளம் பெறும் உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

*பின்னிணைப்பு - 1*

**இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு நியமிப்பதற்காக நடாத்தப்படும் திறந்த/வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைகள் தொடர்பான பாடத்திட்டம் பற்றிய விபரம் :**

பரீட்சை பின்வரும் வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் :-

பகுதி 'அ'

| இல. | விடயங்கள் | காலம் | சித்திப் புள்ளி | ஆகக் கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | நிதிக் கணக்கியல் I | 3 மணித்தியாலம் | 40 | 100 |
| 02 | நிதிக் கணக்கியல் II | 3 மணித்தியாலம் | 40 | 100 |
| 03 | செலவினம் மற்றும் முகாமைத்துவக் கணக்கியல் | 3 மணித்தியாலம் | 40 | 100 |
| 04 | அரச நிதி முகாமைத்துவம் | 3 மணித்தியாலம் | 40 | 100 |
| 05 | கணக்காய்வு மற்றும் விசாரணை | 3 மணித்தியாலம் | 40 | 100 |
| 06 | பொது விவேகம் மற்றும் கிரகித்தல் | 3 மணித்தியாலம் | 40 | 100 |

**பாடத் திட்டம்**.- பாட இலக்கம் 01 மற்றும் 02 நிதிக் கணக்கியல் I மற்றும் II :

நிதி கணக்கீட்டின் தன்மை மற்றும் கணக்குகளைப் பயன்படுத்துவோரும் அவர்களுக்குத் தேவைப்படும் தகவல்களும்

கணக்கீட்டு முறைமை

கணக்கீட்டுச் சமன்பாடுகள், இரட்டைக் கணக்குப் பதிவு முறையும் கணக்கீட்டு முறைமைகளும், ஆரம்பப் பதிவேடுகளும் பேரேடுகளும், மீதியினைப் பரீட்சித்தல், திரண்ட முற்பணக் கொடுப்பனவுகள், சீராக்கங்கள், மூலதன செலவினம், வருமானச் செலவு, பெறுமானத் தேய்வு, தொங்கல் கணக்குகள், கணக்கிணக்கக் கூற்றுகள், பூரணப்படுத்தப்படாத அறிக்கைகள்.

இறுதிக் கணக்குகள்.- உற்பத்திக் கணக்கு, வியாபார இலாப நட்டக் கணக்குகள், ஐந்தொகை, நிதிப் பாய்ச்சல் கூற்றும் மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கு.

பங்குடமை கணக்கீடு.- பங்குடமை உடன்படிக்கைகள், பங்குடமையில் கணக்கு பதிவுகள், நிலையான மூலதனக் கணக்குகள், நடைமுறைக் கணக்குகள், கடன் கணக்குகள், மீளப் பெறல் கணக்குகள், பங்குடமை இறுதிக் கணக்கினைத் தயாரித்தல், பங்குடமை இணைப்பு மாற்றங்கள், நன்மதிப்பினைப் பேணுதலும் பங்காளர்களை அனுமதித்தலும், பிற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதான நடவடிக்கைகள், பங்குடமையைக் கலைத்தல், கூட்டு முயற்சிகள்.

*பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் கணக்கீடு.-* பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் தன்மை, உத்தியோக நிரல்படுத்தப் பட்ட கம்பனிகள் மற்றும் பங்குச் சந்தை, பங்குடமை மற்றும் கடன் மூலதனம், பகிரத்தக்க இலாபம், உள்ளக மற்றும் வெளி பயன்பாட்டிற்கான இறுதிக் கணக்குகள், கணக்குக் கூற்றுக்களுக்கான பொருள்கோடல், கணக்கீட்டு விகிதங்கள்.

*விசேட கொடுக்கல் வாங்கல்களுக்கான கணக்கீடு.-* கம்பனிகள், சங்கங்கள், கையிருப்பு, வாடகைக் கொள்வனவும் கடன் விற்பனைகளும், குத்தகைக்கு விடல், முதலீடுகள், செலாவணி உண்டியல்கள், நீண்டகால ஒப்பந்தங்கள், வேத்துரிமைகள், வெற்றுக் கணக்குகள், வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள்.

*கணக்கீட்டு நடவடிக்கைகளுக்கு கணனிகளைப் பயன்படுத்தல்.-* கணனிகளின் வகைகள்/வன்பொருள் மற்றும் மென்பொருள், கணனி விநியோக மென்பொருள், இலத்திரனியல் கணக்குத் தாள்கள், கணனிமயப்படுத்திய கணக்கீடு.

*விடய இல.03- செலவினம் மற்றும் முகாமைத்துவக் கணக்கியல்.- செலவினக் கணக்கீடு, நிதிக் கணக்கீடு, முகாமைத்துவக் கணக்கீடு, ஆகு செலவுக் கணக்கீட்டின் நோக்கம், கணக்கியலை முகாமைத்துவத் துணைக் கருவியாகப் பயன்படுத்தல்.*

*பொருட் செலவு.-* கொள்வனவு நடைமுறைகள், களஞ்சிய முறைகள், பொருள் வழங்கலை மதிப்பீட்டு செய்யும் முறைகள், ஊக்குவிப்புக் கொடுப்பனவும் மிகையூதியக் கொடுப்பனவும்.

*ஊழியச் செலவு.-* நேரம் பதிதல், நேரம் ஒதுக்குதல், சம்பள கொடுப்பனவு முறைகள், மிகையூதியக் கொடுப்பனவுகளும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும், சம்பளங்கள் மற்றும் கூலிகள் என்பவற்றினை புத்தகப் பதிவு வைத்தல்.

*பொது விடயங்களுக்கான செலவுகள்.-* வகைப்படுத்திய ஒதுக்கங்கள் மற்றும் விநியோகம், அகற்றல் முறைகள், பொது விடய நிருவாகம், வியாபாரம் மற்றும் விநியோகம் பற்றிய பொது விடயச் செலவுகள்.

*திரண்ட மற்றும் திரளாத கணக்குகள்.-* செலவுக் கட்டுப்பாட்டுக் கணக்குகள், செலவு மற்றும் நிதிக் கணக்குகளின் கணக்கிணக்கம், முழுமைக் கணக்குகள்.

*செலவீட்டு முறைகள்.-* ஒப்பந்தச் செலவீடு, தொழில் செலவீடு, திணைக்கள செலவீடு, பொருள் செலவீடு, செய்முறைச் செலவீடு, அலகு செலவீடு, சேவைகள் செலவீடு, வெவ்வேறு செலவீட்டு முறைமைகளின் கீழ் தேறப்பெறாத இலாபம்.

*எல்லை நிலைச் செலவீடு.-* பங்களிப்புக்கள்/விற்பனை, சமவரவு குறிப்புக்கள், எல்லை நிலைச் செலவீட்டின் பிரயோகங்கள், எல்லை நிலைச் செலவீட்டுடன் தொடர்புடைய கணக்கீட்டுப் பதிவுகள்,

*நியம செலவீடு.-* நியம செலவுகள், உண்மையான செலவுகள், அடிப்படை வேறுபாடுகள், கணக்கீட்டு நடைமுறைகள்

*வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு.-* தொழிற்பாட்டு வரவு செலவுத் திட்டம், பிரதான வரவு செலவுத் திட்டம், நெகிழ்வுத் தன்மைமிக்க வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு, தொடர் வரவு செலவுத் திட்டவாக்கம் வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாட்டுத் தொழிற்பாடு.

*பாட இல.04 - அரச நிதி முகாமைத்துவம்.- அரச நிதி தொடர்பான சட்டத் தன்மை*

*திரண்ட நிதியம், விசேட சட்டச் செலவினம், நானாவித நிதியம், அரச படுகடன், வெளிநாட்டு உதவி, அரசிறைச் செயல்முறைகள்.*

*பொறுப்புக்கள்.-* பாராளுமன்றத்தின், நிதி அமைச்சரின், திறைசேரியின் கணக்காளர் நாயகத்தின், கணக்காய்வாளர் நாயகத்தின், அரச கணக்குகள் குழுவின், அரச தொழில் முயற்சிகள் குழுவின், பிரதான கணக்கீட்டு அலுவலரின், தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மற்றும் நாணயச் சபையின் பொறுப்புக்கள்.

*வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டமூலம்.-* வரவு செலவுத் திட்ட முறைமையும் நடைமுறைகளும், வருமான செலவின மதிப்பீடுகளும்

*வரவு செலவுத் திட்டத்தை செயற்படுத்துதல்.-* வரவு செலவுத் திட்டத்தை செயற்படுத்துவதற்கான ஒழுங்குக் கட்டமைப்பு, வருமான சேகரிப்பு ஒழுங்கு விதிகள், கொடுப்பனவு செலுத்துவதற்கான கட்டு நிதி, நிதி தொழிற்பாடுகளின் கண்காணிப்பு, பணிகளை கையளித்தல், ஒம்புட்ஸ்மன் நடைமுறைகள், வீரமொங் ஒழுங்கு விதிகள், குறைநிரப்பு மதிப்பீடுகள், வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு, கொள்வனவு நடைமுறைகள்.

*அரசாங்க கணக்கீட்டு முறைமையும் நடைமுறைகளும்.-* அரசாங்க சொத்துக்கள் பற்றிய பொறுப்புக்கள், வருமானம் மற்றும் ஏனைய கிடைப்பனவுகள் பற்றிய கணக்கீடு, செலவினம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளுக்கான கணக்கீடு, வெளிநாட்டு உதவிக்கான கணக்கீடு, நட்டத்தை கைவிடல் மற்றும் பதிவழித்தல் பற்றிய கணக்கீடு.

*மீளாய்வு.-* உடனடி அறிக்கைகள், மாதாந்த கணக்குச் சுருக்கங்கள், நிதி மற்றும் பௌதீக செயலாற்றுகை மீளாய்வு, வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கு, நாட்டின் கணக்குகள் பற்றிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை, அரச கணக்குகள் குழுவின் சாராம்சம், அரச தொழில் முயற்சிகள் குழுவின் அறிக்கை.

*பாட இல. 05 - கணக்காய்வும் விசாரணைகளும்.- கணக்காய்வின் தன்மை மற்றும் குறிக்கோள் - கணக்காய்வின் பொறுப்புக்கள்*

*உள்ளக கணக்காய்வு, புறக்கணக்காய்வு, சட்டவாக்கம் :* இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் அரச திணைக்களங்கள், அமைச்சுக்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களுடன் தொடர்புடைய சட்டமல்லாத – 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ், கணக்காய்வு நியமங்கள், கணக்காய்வு அபிப்பிராயங்கள், கணக்காய்வின் எண்ணக்கருக்கள் கணக்காய்வாளரது சுதந்திரமும் பிற ஆள்சார் பண்புகளும், உண்மை மற்றும் நியாயத் தன்மை, பௌதீகத் தன்மை, கணக்காய்வுத் தன்மைகள், கணக்காய்வாளரின் பொறுப்புகள், கணக்காய்வுக்கு உட்பட்டவரின் பொறுப்புகள்.

*பாடத் திட்டமும் எல்லைகளும்.-* பாடத் திட்டத்தை நிர்ணயித்தல், கருதுகோள் மற்றும் வரையறைகள்

*கணக்காய்வுத் தரங்கள் மற்றும் வழிகாட்டல்களின் பொறுப்புக்கள்.-* கடமையாற்றுதல் கடிதங்களின், முகாமைத்துவ கடிதங்களின் மற்றும் பிரதிநிதித்துவ கடிதங்களின் பொறுப்புக்கள், அடிப்படை கணக்காய்வு முறைமைகள் மற்றும் மீளாய்விற்கான ஒழுங்கு விதிகள், உள்ளகக் கட்டுப்பாட்டு மதிப்பீடுகள்

*அளவுத்திட்ட வரைபடங்கள், கேள்விக் கொத்துக்கள்.- கணக்காய்வு திட்டமிடலும் கட்டுப்பாடும்*

கணக்காய்வு திட்டமிடலும், நேரம் குறித்தல், இடைக்கால மற்றும் இறுதிக் கணக்காய்வு, செயற்பாடுகளுக்கு பொறுப்பு வழங்குதல், கணக்காய்வுக் கட்டுப்பாடு, உள்ளகக் கட்டுப்பாட்டுப் பயன்பாடு உள்ளடங்கலாக மேற்கொள்ளப்பட்ட வேலைகளை பதிவு செய்தல், உள்ளக வேலைகளை பதிவு செய்தல், உள்ளகக் கட்டுப்பாடு மதிப்பீட்டிற்கான வினாக் கொத்துக்களையும் படிவங்களையும் தயாரித்தல்.

*நிதிக் கணக்காய்வுக்கான பெறுமதிகள், எண்ணக்கருக்கள் மற்றும் பண்புகள்*

*அது அரசாங்கத் துறையுடன் தொடர்புபடும் விதம், பகுப்பாய்வு ரீதியான கணக்காய்வு*

*கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையின் கணக்காய்வு.– வரையறுக்கப்பட்ட கம்பனிகள்.-* நியதிச்சட்ட ஆவணங்கள், பணிப்பாளர்களின் தத்துவங்களும் கடமைகளும், பங்கிடக் கூடிய இலாபங்கள், கணக்காய்வாளர்களின் நியமனம், ஊதியமும் நீக்கமும், புதிய கணக்காய்வாளர்களை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், கணக்காய்வாளர்களின் தத்துவங்களும் கடமைகளும்.

*பரிசோதனைகளின் தன்மையும் அளவும்.-* ஒப்பீட்டுப் பரீட்சை, சுயாதீனமான பரிசோதனை, மாதிரி நுட்பங்கள், ஐந்தொகை சரிபார்த்தல், வருமான செலவின கணக்குகளை சரிபார்த்தல்.

*கணக்காய்வாளர்கள் மற்றும் கணக்காளர்களின் தொழில்சார் பொறுப்புக்கள்.-* தொழில்சார் நடத்தையும் ஒழுக்கவியலும், சட்ட உரிமைகளும் பொறுப்புகளும், கணக்காளர் மற்றும் கணக் காய்வாளர்களின் சட்ட ரீதியான பொறுப்பும் நிகழ்வுகள் தொடர்பான சட்டரீதியான விடய அறிவுடன் தொடர்புடைய சட்டங்களும்.

*விசாரணைகள்.-* விசாரணையுடன் தொடர்புடைய பாடத் திட்டத்தை திட்டமிடல், பயன்படுத்த வேண்டிய நுட்பங்களும் நடைமுறைகளும், புலனாய்வு நடத்துவதற்கான எண்ணத்தின் உதாரணங்கள், சாத்தியவள ஆய்வுகள், கொள்வனவு, விற்பனை, கடன் வழங்கல், விலையிடல் போன்ற வியாபார நிறுவனங்களின் மதிப்பீடுகள். தகவல் தொகுப்பு அறிக்கைகளுக்கான கணக்காளர்கள், கணக்காய்வாளர்களின் அறிக்கை, அறிக்கையிடல் செயற்பாடுகள், மோசடி புலனாய்வுகள், கருத்திட்ட மதிப்பீடுகள்.

*அறிக்கையிடல் தொழிற்பாடுகள்.-* உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையில் பலவீனங்கள் பற்றி முகாமைக்கு அறிவித்தல், அரச மற்றும் கூட்டுத்தாபன கணக்காய்விற்கு எழுத்து மூலம் விசேட அறிக்கையிடல் பணிகள், தகவற்தொகுப்பு அறிக்கைகள், விசாரணை அறிக்கைகள்.

***விடய இல.- 06 பொது விவேகமும் கிரகித்தலும்***

### *பகுதி 'அ' - கிரகித்தல்*

கிரகித்தல் வினாத்தாளில் தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்படுவர். இன்னுமொரு உரைப்பகுதியும் தரப்படும், அதன் சாராம்சத்தை உரைப்பகுதியிலுள்ள சொற்களில் மூன்றிலொரு பகுதிக்கு சுருக்குமாறு கேட்கப்படும்.

### *பகுதி 'ஆ' - பொது விவேகம்*

**குறிப்பு**.- (I) மேற்படி (ஆ) மற்றும் (இ) இலுள்ள "தகைமை பெற்ற பரீட்சை" என்ற சொல்லின் மூலம் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைகளில் ஒன்றினைக் குறிக்கும்.

(II) பரீட்சார்த்திகள் பரீட்சையின் அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் பதிலளித்தல் வேண்டும்.

(III) தமது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மொழியை மாற்றுவதற்கு பரீட்சார்த்திகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(அ) பரீட்சார்த்தி ஒருவர் தகைமை பெற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தகைமை பெற்ற பரீட்சையின் பாடங்களை ஒன்றிற்கு மேற்பட்ட மொழிகளில் சித்தியடைந்திருப்பின், அப்பரீட்சையில் அவர் கூடுதலான பாடங்களை எந்த மொழியில் சித்தியடைந்துள்ளாரோ அம்மொழியில் அல்லது அரச கரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

(இ) பிரதான பாடத்தை ஒரு மொழியிலும், மேலதிக பாடத்தை வேறொரு மொழியிலும், சித்தியடைந்துள்ள விசேட பட்டம் ஒன்றினைப் பெற்றுள்ள உத்தியோகத்தர் ஒருவர் பிரதான பாடங்களை சித்தியடைந்த மொழியில் அல்லது அரச கரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

*2-573*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.